Which
விச்

Which is your house ?
விச் இஸ் யுவர் ஹவுஸ் ?
உன் வீடு எது ?

The tall house is mine
தி டால் ஹவுஸ் இஸ் மைன்
உயரமான வீடு என்னுடையது

Which boy has a long nose ?
விச் பாய் ஹேஸ் எ லாங் நோஸ் ?
எந்தப் பையனுக்கு நீள மூக்கு உள்ளது ?

The short boy has a long nose
தி ஷார்ட் பாய் ஹேஸ் எ லாங் நோஸ்
குள்ளமான பையனுக்கு நீண்ட மூக்கு உள்ளது

Which is your umbrella ?
விச் இஸ் யுவர் அம்ப்ர்லா ?
உன் குடை எது ?

The green umbrella is mine
தி கிரீன் அம்ப்ரலா இஸ் மைன்
பச்சைக் குடை என்னுடையது

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Where
வேர்

Where is your father?
வேர் இஸ் யுவர் ஃபாதர்?
உன் தந்தை எங்கே?

My father has gone out
மை ஃபாதர் ஹேஸ் கான் அவுட்
எனது தந்தை வெளியே போயிருக்கிறார்

Where is your table?
வேர் இஸ் யுவர் டேபிள்?
உனது மேஜை எங்கே?

My table is in the room
மை டேபிள் இஸ் இன் தி ரூம்
எனது மேஜை அறையில் உள்ளது

Where is your hat?
வேர் இஸ் யுவர் ஹேட்?
உனது தொப்பி எங்கே?

My hat is on the table
மை ஹேட் இஸ் ஆன் தி டேபிள்
எனது தொப்பி மேஜை மீது உள்ளது

When
வென்

When do you go to work?
வென் டு யூ கோ டு ஒர்க்?
நீ எப்போது வேலைக்குப் போகிறாய்?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

I go to work at 7 A.M.
ஐ கோ டு ஒர்க் அட் செவன் ஏ. எம்.
காலை 7 மணிக்கு வேலைக்குப் போகிறேன்

When do you have your lunch ?
வென் டு யூ ஹேவ் யுவர் லஞ்ச் ?
நீ எப்போது சிற்றுண்டி புசிக்கிறாய் ?

I have my lunch at 1 P.M.
ஐ ஹேவ் மை லஞ்ச் அட் ஒன் பி. எம்.
பிற்பகல் 1 மணிக்குச் சிற்றுண்டி புசிக்கிறேன்

When shall I meet you ?
வென் ஷெல் ஐ மீட் யூ ?
நான் உன்னை எப்போது சந்திப்பது ?

Meet me on Monday
மீட் மி ஆன் மன்டே
என்னைத் திங்களன்று சந்திக்கவும்

Who
ஹூ

Who is that ?
ஹூ இஸ் தேட் ?
அது யார் ?

That is Mr. Viswanathan
தட் இஸ் மிஸ்டர் விசுவநாதன்
அவர் விசுவநாதன் என்பவர்

Who is your teacher ?
ஹூ இஸ் யுவர் டீச்சர் ?
உனது ஆசிரியர் யார் ?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Mr. Raman is my teacher
மிஸ்டர் ராமன் இஸ் மை டீச்சர்
திரு ராமன் எனது ஆசிரியர்

Who is your family doctor ?
ஹூ இஸ் யுவர் ஃபேமிலி டாக்டர் ?
உனது குடும்ப வைத்தியர் யார் ?

Whose
ஹூஸ்
யாருடைய

Whose book are you reading ?
ஹூஸ் புக் ஆர் யூ ரீடிங் ?
யாருடைய புத்தகம் நீ படிக்கிறாய் ?

I am reading my book
ஐ ஆம் ரீடிங் மை புக்
நான் என் புத்தகத்தைப் படிக்கிறேன்

Whose pen are you writing with ?
ஹூஸ் பென் ஆர் யு ரைட்டிங் வித் ?
யாருடைய பேனாவால் நீ எழுதுகிறாய் ?

I am writing with my pen
ஐ ஆம் ரைட்டிங் வித் மை பென்
நான் எனது பேனாவால் எழுதுகிறேன்

Whose house do you live in ?
ஹூஸ் ஹவுஸ் டு யூ லிவ் இன் ?
நீ யாருடைய வீட்டில் வசிக்கிறாய் ?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

I live in my sister's house
ஐ லிவ் இன் மை சிஸ்டர்ஸ் ஹவுஸ்
நான் என் சகோதரி வீட்டில் வசிக்கிறேன்

Why
ஹொய்
ஏன்

Because
பிக்காஸ்
ஏனென்றால்

Why are you taking your umbrella ?
ஹொய் ஆர் யூ டேக்கிங் யுவர் அம்ப்ர்லா ?
உன் குடையை ஏன் எடுக்கிறாய் ?

Because it is raining
பிக்காஸ் இட் இஸ் ரெய்னிங்
ஏனென்றால், மழை பெய்துகொண்டிருக்கிறது

Why are you going to bed ?
ஹொய் ஆர் யூ கோயிங் டு பெட் ?
நீ ஏன் படுக்கச் செல்கிறாய் ?

Because I feel sleepy
பிக்காஸ் ஐ ஃபீல் ஸ்லீப்பி
ஏனெனில், எனக்குத் தூக்கம் வருகிறது

Why are you angry with me ?
ஹொய் ஆர் யூ ஆங்கிரி வித் மி ?
Sri Vidyabharathi Book Centre, Sringeri
நீ என்னிடம் ஏன் கோபப்படுகிறாய் ?

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Because you do not help me
பிக்காஸ் யூ டு நாட் ஹெல்ப் மி
ஏனெனில், நீ எனக்கு உதவி செய்யவில்லை

Why do you refer to the dictionary ?
ஹொய் டு யூ ரெஃபர் டு தி டிக்ஷனரி ?
நீ ஏன் அகராதியைப் பார்க்கிருய் ?

Because I want to know the meanings
பிக்காஸ் ஐ வான்ட் டு நோ தி மீனிங்ஸ்
ஏனென்ருல், எனக்குப் பொருள் தெரிய வேண்டும்

Why do you take medicine ?
ஹொய் டு யூ டேக் மெடிசன் ?
நீ ஏன் மருந்து சாப்பிடுகிருய் ?

Because, I have fever
பிக்காஸ், ஐ ஹேவ் ஃபீவர்
ஏனெனில், எனக்கு ஜுரம் உள்ளது

Why do you come late ?
ஹொய் டு யூ கம் லேட் ?
ஏன் நீ தாமதமாக வந்தாய் ?

Because my mother took time to prepare food
பிக்காஸ் மை மதர் டுக் டைம் டு பிரிபேர் ஃபூட்
ஏனென்ருல், என் தாயார் தாமதமாக உணவு தயார் செய்தார்கள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

PART—V

GRAMMAR

இலக்கணம்

பிழையின்றி ஆங்கில மொழியில் பேசவும் எழுதவும் அடிப்படை இலக்கண அறிவு தேவை. பெயர்ச் சொல் (Noun-நவுன்), வினைச் சொல் (Verb-வர்ப்), முன்னிடைச் சொல் (Pro-noun-ப்ரோநவுன்) காலம், (Tense-டென்ஸ்) முதலியவற்றை வாக்கிய அமைப்புடன் இதுவரை தெரிந்து கொண்டீர்கள். இது போதாது. கீழேவரும் பாடங்களில் இலக்கணத்தைச் சற்று விரிவாக விளக்கியிருக்கிறோம்.

பெரிய எழுத்துக்கள்

To begin all Proper Nouns, Capital letters should be used :

சிறப்புப் பெயர்களை (Proper Nouns-ப்ராப்பர் நவுன்ஸ்) எழுத ஆரம்பிக்கையில் பெரிய எழுத்துக்களை உபயோகிக்க வேண்டும். உதாரணம் : Krishnan–கிருஷ்ணன், John-ஜான், Latif-லதீப், Bombay-பம்பாய், Calcutta-கல்கத்தா, London-லண்டன், New York-நியூ யார்க், Berlin-பெர்லின், Tokyo-டோக்கியோ.

To begin every new sentence also you should use capital letters. as :

ஒவ்வொரு புதிய வாக்கியத்தை ஆரம்பிக்கையிலும் பெரிய எழுத்தை உபயோகிக்க வேண்டும். உதாரணம் :

1. This table is made of steel
   திஸ் டேபில் இஸ் மேட் ஆப் ஸ்டீல்
   இந்த மேஜை எஃகால் செய்யப்பட்டிருக்கிறது

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

2. Govind is a good boy
கோவிந் இஸ் எ குட் பாய்
கோவிந்தன் ஒரு நல்ல பையன்

3. I visited Bombay
ஐ விஸிட்டட் பாம்பே
நான் பம்பாய்க்கு விஜயம் செய்தேன்

4. Have you taken bath ?
ஹேவ் யூ டேக்கன் பாத் ?
நீ குளித்து விட்டாயா ?

5. Karachi is a big town
கராச்சி இஸ் எ பிக் டவுன்
கராச்சி ஒரு பெரிய நகரம்

எழுவாய் பயனிலை

Every sentence has two parts :

(1) We name some person or thing.

(2) We say something about that person or thing.

In other words, we must have a subject to speak about; we must say or predicate something about that subject.

ஒவ்வொரு வாக்கியத்துக்கும் இரு பிரிவுகள் உண்டு.

(1) நாம் ஒரு நபரையோ அல்லது பொருளையோ பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிறோம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

(2) அந்த நபரையோ, பொருளையோ ஏதோ ஒன்றைப் பற்றிச் சொல்கிறோம்.

அதாவது நாம் பேசுவதற்கு ஒரு விஷயம் இருக்க வேண்டும். அந்த விஷயம் பற்றி ஏதேனும் ஒன்றைச் சொல்லவேண்டும் அல்லது வற்புறுத்தவேண்டும்.

Now we know that one part names the person thing, or place we talk about. This is called the Subject of the. sentence.

நாம் பேசும் நபர், பொருள் அல்லது இடத்தின் பெயரைச் சொல்லிக் குறிப்பிடுகிறது ஒரு பிரிவு. இது வாக்கியத்தின் எழுவாய் எனப்படும்.

The other part tells something about the Subject This is called the Predicate of the sentence.

அடுத்த பிரிவு, எழுவாயைப் பற்றி ஏதேனும் ஒன்றைச் சொல்கிறது. அது வாக்கியத்தின் பயனிலை (Predicate-பிரிடிகேட்) எனப்படும்.

The following sentences are divided into Subject and Predicate. Observe how they are done :

கீழ்க்கண்ட வாக்கியங்களில் எழுவாயையும் பயனிலையையும் தனித் தனியாகப் பிரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இது எவ்வாறு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கவனிக்கவும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Subject	Predicate
சப்ஜெக்ட் எழுவாய்	பிரிடிகேட் பயனிலை
kites கைட்ஸ் காற்றாடிகள்	fly ஃப்ளை பறக்கின்றன
Cows கவ்ஸ் பசுக்கள்	give milk கிவ் மில்க் பால் தருகின்றன
Raman ராமன் ராமன்	meets me மீட்ஸ் மி என்னைச் சந்திக்கிறான்
The dog தி டாக் நாய்	is black இஸ் பிளாக் கறுப்பாக இருக்கிறது
Prakash பிரகாஷ் பிரகாஷ்	had a pretty pup ஹேட் எ ப்ரிட்டி பப் ஓர் அழகான நாய்க்குட்டியை வைத்திருந்தான்
The dog தி டாக் நாய்	bites a man பைட்ஸ் எ மன் ஒரு மனிதனைக் கடித்தது
He ஹி அவன்	quarelled with me க்வாரல்ட் வித் மி என்னுடன் சண்டை போட்டான்
A iger எ டைகர் ஒரு புலி	killed a gcat கில்டு எ கோட் ஓர் ஆட்டைக் கொன்றது

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தொக்கி நிற்கும் எழுவாய்கள்

In the following sentences the subjects are left out. But they are understood. The sentences may consist of one or two words as:

கீழ்க்கண்ட வாக்கியங்களில் எழுவாய்கள் விடப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை தொக்கி நிற்கின்றன. ஒன்று அல்லது இரண்டு சொற்கள் அடங்கிய வாக்கியங்களாகவும் அவை இருக்கலாம்.

உதாரணங்கள் :—

1. Speak !
   ஸ்பீக்
   பேசு

2. Thank you !
   தேங்க் யூ
   நன்றி

3. Come in
   கம் இன்
   உள்ளே வா

4. Run away
   ரன் எவே
   ஓடிப் போ

5. Meet me
   மீட் மி
   என்னைச் சந்திக்கவும்

6. Cheer you
   சியர் யூ
   உனக்குக் களி கூறுகிறேன்

In sentences 1, 3, 4 and 5 the subject 'you' is understood. In sentences 1 and 6 the subject (I) is understood.

1, 3, 4, 5 வாக்கியங்களில் 'you-யூ' என்ற எழுவாயும், 2, 6 வாக்கியங்களில் 'I-ஐ' என்ற எழுவாயும் தொக்கி நிற்கின்றன.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

THE PARTS OF SPEECH
சொல்லியல்

Words are divided into different kinds or classes. They are called Parts of Speech according to their use. Here, 'use' means the work they do in a sentence. The Parts of Speech are eight in number :-

சொற்கள் பல வகைப்படும். அவை அவற்றின் உபயோகத்துக்கு இணங்க, பேச்சின் பல்வேறு உறுப்புகளாக வழங்குகின்றன. அவை எட்டு வகைப்படும்.

1. Noun (நவுன்) - பெயர்ச் சொல் 2. Verb (வர்ப்) - வினைச்சொல் 3. Pronoun (ப்ரோ நவுன்) - பிரதிப் பெயர்ச் சொல் 4. Adjective (அட்ஜெக்டிவ்) - பெயரிடைச் சொல் 5. Adverb (அட்வர்ப்) - வினையிடைச் சொல் 6. Preposition (பிரிப்போசிஷன்) - முன்னிடைச் சொல் 7 Conjunction (கஞ்ஜக்ஷன்) - இணையிடைச் சொல் 8. Interjection (இன்டர் ஜெக்ஷன்) - வியப்பிடைச் சொல்.

A Noun is the name of a person, place or thing. The underlined words in the following sentences are Nouns.

Noun - நவுன் என்பது ஒரு மனிதனுடைய, ஓர் இடத்தினுடைய அல்லது ஒரு பொருளினுடைய பெயர் ஆகும். கீழ்க்கண்ட வாக்கியங்களில் தடித்த எழுத்துக்கள் பெயர்ச் சொற்களாகும்.

Bharathiyar was a great poet
பாரதியார் வாஸ் எ கிரேட் போயட்
பாரதியார் ஒரு மகா கவி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Madras is on the **sea shore**
மெட்ராஸ் இஸ் ஆன் தி ஸீ ஷோர்
சென்னை கடற்கரையோரம் உள்ளது

The coffee has good **flavour**
தி காபி ஹேஸ் குட் ஃப்ளேவர்
காபி நல்ல மணம் கமழ்கின்றது

The sun rays are hot
தி சன் ரேஸ் ஆர் ஹாட்
சூரியனின் கதிர்கள் வெப்பமாக உள்ளது

Note : The word thing refers to (1) all objects that we see, hear, taste, touch or smell; (2) something that we can think of, but cannot perceive by the senses.

குறிப்பு : 'பொருள்' என்பது (1) நாம் பார்க்கும் கேட்கும், சுவைக்கும், தொட்டு உணரும்; நுகரும் எல்லா வற்றையும் குறிக்கும். (2) நாம் சிந்திக்கக்கூடிய, ஆனால் புலனால் உணரக்கூடாததையும் குறிக்கும்.

2. A Verb is a word which say something about some person, place or thing. The words in the following sentences are verbs.

ஒரு மனிதனைப்பற்றியாவது, இடத்தைப்பற்றியாவது, பொருளைப்பற்றியாவது ஏதேனும் ஒன்றைச் சொல்லும் சொல் வினைச்சொல் 'verb' - வர்ப் எனப்படுவது. கீழ்க் கண்ட வாக்கியங்களில் இட்டாலிக்ஸ் (சாய்ந்த) எழுத் துக்களில் உள்ள சொற்கள் வினைச்சொற்கள் ஆகும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

The boy *wrote* a letter to his father
தி பாய் ரோட் எ லெட்டர் டு ஹிஸ் ஃபாதர்
சிறுவன் தன் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதினான்

Tamil Nad *is* a progressive State
டமில் நாடு இஸ் எ பிராக்ரஸிவ் ஸ்டேட்
தமிழ் நாடு முற்போக்கு உள்ள மாநிலம்

A tiger *killed* a cow
எ டைகர் கில்டு எ கவ்
ஒரு புலி ஒரு பசுவைக் கொன்றது

Rajan *kicks* a ball
ராஜன் கிக்ஸ் எ பால்
ராஜன் ஒரு பந்தை உதைக்கிறான்

வினைச் சொல் (verb-வர்ப்) இன்றி வாக்கியத்தை அமைக்க முடியாது. ஒரு வாக்கியத்தில் வினைச் சொல் பல சந்தர்ப்பங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களாகவும் வரும். கீழ்க்கண்ட வாக்கியங்களில் 'இட்டாலிக்ஸ்' (சாய்ந்த) எழுத்துக்களில் உள்ள சொற்கள் உதாரணமாகும்.

Raman *is talking*
ராமன் இஸ் டாக்கிங்
ராமன் பேசிக்கொண்டிருக்கிறான்

He *was beaten* by a thief
ஹீ வாஸ பீட்டன் பை எ தீஃப்
அவன் ஒரு திருடனால் அடிக்கப்பட்டான்

She *will come* to–morrow
ஷி வில் கம் டுமாரோ
அவள் நாளைக்கு வருவாள்

—14

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

The enemy has *been defeated*
தி எனிமி ஹேஸ் பீன் டிஃபீடட்
பகைவன் தோற்கடிக்கப்பட்டான்

3. A Pronoun is a word used instead of a noun. The pronouns are in *italics* in the following sentences.

பிரதிப் பெயர்ச் சொல் என்பது ஒரு பெயர்ச் சொல்லுக்குப் பதிலாக உபயோகிக்கப்படும் சொல்லாகும். கீழ்க் கண்ட வாக்கியங்களில் பிரதிப் பெயர்ச் சொற்கள் 'இட்டாலிக்ஸ்' எழுத்துக்களில் காட்டப்பட்டுள்ளன.

Chandar is absent as *he* is ill
சந்தர் இஸ் ஆப்செண்ட் ஏஸ் ஹி இஸ் இல்
சந்தர் நோயுற்றிருப்பதால் அவன் ஆஜராகவில்லை.

The pens are where you left *them*
தி பென்ஸ் ஆர் வேர் யு லெஃப்ட் தெம்
எங்கே நீ பேனுக்களை வைத்திருந்தாயோ அவை அங்கேயே இருக்கின்றன

4. An Adjective qualifies (adds something to the meaning of) a Noun ; as

'Adjective' (அட்ஜெக்டிவ்) அல்லது பெயரிடைச் சொல் என்பது, ஒரு பெயர்ச் சொல்லைத் தழுவி நிற்கும். அதாவது பெயர்ச் சொல்லின் பொருளுக்கு மேலும் அதிகமாக ஏதேனும் ஒரு சிறப்பைச் சேர்க்கும். 'சாய்ந்த' எழுத்துக்கள் அட்ஜெக்டிவ்.

He is a *clever* boy
ஹி இஸ் எ கிளவர் பாய்
அவன் ஒரு புத்திசாலியான பையன்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

They are *beautiful* flowers
தெ ஆர் பியூட்டிஃபுல் ஃப்ளவர்ஸ்
அவை அழகான மலர்கள்

5. An Adverb is a word which adds something to the meaning of a Verb, an Adjective or another Adverb. The words in italics are Adverbs.

வினையிடைச் சொல், (அட்வர்ப்) என்பது ஒரு வினைச் சொல், ஒரு பெயரிடைச் சொல், (அட்ஜெக்டிவ்) அல்லது மற்றோர் வினையிடைச் சொல்லின் (அட்வர்ப்) பொருளை விரிவுபடுத்துகிறது. வினையிடைச் சொற்கள் 'இட்டாலிக்ஸ்' எழுத்துக்களில் காட்டப்பட்டுள்ளன.

He did the work *quickly*
ஹி டிட் தி ஒர்க் க்விக்லி
அவன் வேலையைச் சீக்கிரமாக முடித்தான்

The house is *very beautiful*
தி ஹவுஸ் இஸ் வெரி பியூட்டிஃபுல்
வீடு மிகவும் அழகாக இருக்கிறது

He gave the information *quite* correctly
ஹி கேவ் தி இன்ஃபர்மேஷன் க்யட் கரெக்ட்லி
அவன் தகவலை முற்றும் சரியாகச் சொன்னான்.

6. A preposition is a word placed before a Noun or a Pronoun to show in what relation the person or thing denoted by the Noun or Pronoun stands to something else. The italicised words in the following sentences are Pronouns :

ஒரு பெயர்ச் சொல்லால் (Noun) அல்லது பிரதி பெயர்ச் சொல்லால் குறிக்கப்படும் மனிதனுக்கோ அல்லது பொரு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ளுக்கோ, மற்றொன்றுக்கோ உள்ள சம்பந்தத்தைத்தெரிவிப்ப தற்காக அந்தப் பெயர்ச் சொல்லுக்கு முன்னேயாவது பிரதி பெயர்ச் சொல்லுக்கு முன்னேயாவது Preposition-பிரிப்போசிஷன் (முன்னிடைச் சொல்) வரும். கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் 'இட்டாலிக்ஸ்' எழுத்துக்களில் உள்ள சொற்கள் முன்னிடைச் சொற்களாகும்.

There is a cow *in* the shed
தேர் இஸ் எ கவ் இன் தி ஷெட்
கொட்டகையில் ஒரு பசு இருக்கிறது

Ram is fond *of* sweets
ராம் இஸ் ஃபான்ட் ஆப் ஸ்வீட்ஸ்
ராமனுக்கு இனிப்பில் பிரியம்

He jumped *into* the river
ஹி ஜம்ப்டு இன்டு தி ரிவர்
அவன் ஆற்றில் குதித்தான்

7. A Conjunction is a word which joins words or sentences. In the following sentences the conjuntions are *italicised.*

கஞ்ஜங்ஷன் (இணைப்புச் சொல்) என்பது சொற்களையோ அல்லது வாக்கியங்களையோ இணைக்கிறது. கீழ்க் கண்ட வாக்கியங்களில் இணைப்புச் சொற்கள் 'இட்டாலிக்ஸ்' எழுத்தில் காட்டப்பட்டிருக்கின்றன.

God made man *and* man made the town
காட் மேட் மேன் அன்ட் மேன் மேடு தி டவுன்
இறைவன் மனிதனைப் படைத்தான்; மனிதன் நகரைப் படைத்தான்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

He is poor *but* honest
ஹி இஸ் புவர் பட் ஆனஸ்ட்
அவன் ஏழை, ஆனால் யோக்கியன்

She must obey *or* suffer
ஷி மஸ்ட் ஒபே ஆர் சஃபர்
அவள் பணியவேண்டும் அல்லது கஷ்டப்பட வேண்டும்

I reply to letters *because* it is good manners
ஐ ரிப்ளை டு லெட்டர்ஸ் பிகாஸ் இட் இஸ் குட் மேனர்ஸ்
நான் கடிதங்களுக்குப் பதில் எழுதுகிறேன்; ஏனெனில் அதுதான் மரியாதை

8. An Interjection is a word which expresses some sudden feeling. Interjections are italicised in the sentences given below.

'இன்டர்ஜெக்ஷன்' அல்லது வியப்பிடைச் சொல் என்பது திடீரென்று உள்ளத்தில் ஏற்படும் உணர்ச்சியைத் தெரிவிப்பதாகும். கீழே தரப்பட்ட வாக்கியங்களில் வியப்பிடைச் சொற்கள் 'இட்டாலிக்ஸ்' எழுத்துக்களில் காட்டப்பட்டிருக்கின்றன.

Hullo! What are you doing there?
ஹலோ! வாட் ஆர் யூ டூயிங் தேர்?
ஹல்லோ! நீ அங்கு என்ன செய்துகொண்டிருக்கிறாய்?

What! He has invited you!
வாட்! ஹி ஹேஸ் இன்வைட்டட் யூ!
என்ன! அவன் உன்னை அழைத்திருக்கிறானா?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Alas! He is dead!
அலாஸ்! ஹி இஸ் டெட்
அந்தோ! அவன் இறந்துவிட்டான்

THE KINDS OF NOUNS
பெயர்ச் சொல் வகைகள்

There are mainly four kinds of Nouns :
பெயர்ச் சொற்கள் குறிப்பாக நான்கு வகைப்படும்.

(1) Proper Noun-ப்ராப்பர் நவுன்-சிறப்புப் பெயர். (2) Common Noun-காமன் நவுன்-பொதுப் பெயர். (3) Collective Noun–தொகுதிப் பெயர். (4) Abstract Noun-அப்ஸ்ட்ராக்ட் நவுன்-பண்புப் பெயர்.

1. A Proper Noun is the name of some particular person or place ; as

Proper Noun-ப்ராப்பர் நவுன் அல்லது சிறப்புப் பெயர் என்பது ஒரு மனிதனையாவது பொருளையாவது சிறப்பித்துக் காட்டும். உதாரணம் :

Sita, David (நபர்களின் பெயர்கள்) Bombay, New York (நகரங்களின் பெயர்கள்) India, Japan (நாடுகளின் பெயர்கள்.)

சிறப்புப் பெயர்களை (Proper Nouns) எழுதுகையில் எப்போதும் முதலில் பெரிய எழுத்தைப் போட்டு எழுத வேண்டும்.

Proper Nouns are sometimes used as Common Nouns; as

சிறப்புப் பெயர்கள் சில சமயங்களில் பொதுப் பெயர்களாகவும் (காமன் நவுன்) உபயோகிக்கப்படுகின்றன. உதாரணமாக :

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Kalidas is often called *the Shakespeare* of India

காளிதாசனை இந்தியாவின் ஷேக்ஸ்பியர் என்று அழைப்பதுண்டு.

Shivaji was *the Napoleon* of India

சிவாஜி இந்தியாவின் நெப்போலியனாக விளங்கினார்.

மேலே குறிப்பிட்ட வாக்கியங்களில் 'இட்டாலிக்ஸ்' எழுத்துக்களில் உள்ள சொற்களான ஷேக்ஸ்பியர், நெப்போலியன் என்ற இரண்டும் பொதுப் பெயர்களாக உபயோகிக்கப்படுகின்றன.

2. A Common Noun is a name given in common to every person or thing of the same class or kind. It refers not a person or a thing in particular; as

ஒரே பிரிவு அல்லது ரகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு நபருக்கும் அல்லது பொருளுக்கும் கொடுக்கப்பட்டுள்ள பெயர் பொதுப் பெயராகும். ஆகவே, பொதுப் பெயர் என்பது குறிப்பிட்ட ஒரு நபரையோ அல்லது பொருளையோ சிறப்பித்துக் காட்டாது. உதாரணமாக :

(1) Man - மேன் - மனிதன் (2) Book-புக்-புத்தகம் (3) Country-கன்ட்ரி-தேசம்

1. 'Man' என்னும் சொல் 'David' என்பதைப் போல ஒரு மனிதனை மட்டும் சுட்டாமல், எந்த மனிதனுக்கும் பொருந்தும்.

2. 'Book' என்னும் சொல் ஒரு குறிப்பிட்ட புத்தகத்தை மாத்திரம் சொல்லாமல் எந்தப் புத்தகத்துக்கும் பொதுவாக வரும். 3. 'Country' என்னும் சொல் 'India' என்பதைப் போல ஒரு தேசத்தை மட்டும் குறிப்பிட்டுக்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

காட்டாமல் உலகத்தில் உள்ள எந்தத் தேசத்திற்கும் பொருந்தும்.

3. A Collective Noun is the name of a number (or collection) of persons or things taken together and spoken of as a whole; as

தொகுதிப் பெயர் (கலெக்டிவ் நவுன்) என்பது பல நபர்கள் அல்லது பொருள்களின் சேர்க்கையை ஒரே மொத்தமாகச் சுட்டி அழைப்பதாகும். உதாரணமாக,

Crowd-கிரவுட்-கூட்டம்

Team-டீம்-குழு

Herd-ஹேர்ட்-மந்தை

Army-ஆர்மி-இராணுவம்

Fleet-ஃப்ளீட்-கப்பற்படை

Parliament-பார்லிமெண்ட்-நாடாளுமன்றம்

4. An Abstract Noun is the name of a quality, an action or a state apart from the object to which it belongs; as

Abstract Noun-(அப்ஸ்ட்ராக்ட் நவுன்) பண்புப் பெயர் என்பது குணம், நிலைமை, செயல் ஆகியவற்றை அவற்றின் பொருளினின்றும் பிரித்துக் காட்டும். உதாரணம் :

Quality : Kindness-கைன்ட்னஸ், Humility-ஹுமிலிட்டி, Cleverness-கிளவர்னஸ், Colour-கலர்.
பண்பு : அன்பு, அடக்கம், புத்திசாலித்தனம், நிறம்.

State : Poverty-பாவர்ட்டி, Boyhood-பாய்ஹுட், Slavery-ஸ்லேவரி, Sleep-ஸ்லீப், Sickness-சிக்னஸ்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நிலைமை: வறுமை, பிள்ளைப்பிராயம், அடிமைத்தனம், தூக்கம், நோயுற்ற நிலை.

Action: Laughter - லாஃப்டர், Theft - தெஃப்ட், Hatred-ஹேட்ரட், Movement – மூவ்மென்ட் Revenge-ரிவஞ்ச்

செயல்: சிரிப்பு, திருட்டு, வெறுப்பு, அசைவு, பழிவாங்குதல்.

ஒரே வார்த்தை பொருளுக்குத் தக்கவாறு Abstract Noun ஆகவும் (பண்புப் பெயர்) Common Noun ஆகவும் (பொதுப் பெயர்ச் சொல்) வரும்.

Abstract Nouns are formed from Adjectives, from Common Nouns, and from Verbs.

பண்புப் பெயர்ச்சொற்கள் பெயரிடைச் சொற்களிலிருந்தும் (அட்ஜெக்டிவ்ஸ்) பொதுப் பெயர் சொற்களிலிருந்தும் (காமன் நவுன்ஸ்) வினைச் சொற்களிலிருந்தும் (வர்ப்ஸ்) ஏற்படுகின்றன.

ADJECTIVES மூலம் உண்டாகும்

Abstract Nouns

Adjectives	Abstract Nouns
Kind-அன்பான	Kindness-அன்பு
Wise-விவேகமுடைய	Wisdom-விவேகம்
Poor–ஏழ்மையான	Poverty-ஏழ்மை
Honest-நேர்மையான	Honesty–நேர்மை
Long-நீண்ட	Length-நீளம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

COMMON NOUNS மூலம் உண்டாகும் Abstract Nouns

Common Nouns	Abstract Nouns
Friend-நண்பன்	Friendship-நட்பு
Hero-வீரன்	Heroism-வீரத்தனம்
Mother-தாய்	Motherhood-தாய்மை
Slave-அடிமை	Slavery-அடிமைத்தனம்
Child-குழந்தை	Childhood-குழந்தைப் பருவம்

VERBS மூலம் ஏற்படும் Abstract Nouns

Verbs	Abstract Nouns
Obey-கீழ்ப்படி.	Obedience-கீழ்ப்படிதல்
Serve-சேவை செய்	Service-சேவை
See-பார்	Sight-பார்வை
Advis.-புத்திகூறு	Advice-புத்திமதி
Believe-நம்பு	Belief-நம்பிக்கை

NOUN: பெயர்ச்சொல், *GENDER*-பால்

Living beings are of either the male or female sex. The difference in the form of a Noun which shows whether we speak of a male or a female is called the Gender.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஜீவராசிகள் எல்லாம் ஒன்று ஆண் இனத்தையோ அல்லது பெண் இனத்தையோ சேர்ந்திருக்க வேண்டும். பெயர்ச் சொல்லின்வடிவத்தில் ஏற்படுகிற வேற்றுமையினுல் நாம் குறிப்பிடும் நபர் ஆணு அல்லது பெண்ணு என்று தெரிகிறதல்லவா? அதற்குப் பால் அல்லது ஜெண்டர் (Gender) என்று பெயர்.

1. A Noun that denotes a male is said to be of the Masculine Gender ; as

ஆண் இனத்தைக் குறிக்கும் பெயர்கள் எல்லாம் 'மாஸ்குலைன் ஜெண்டர்' (Masculine gender) அல்லது ஆண் பால் எனப்படும்.

உதாரணம் :

Boy-பாய்-சிறுவன் Lion-லயன்-சிங்கம்

Hero-ஹீரோ–வீரன் Brother-ப்ரதர்-சகோதரன்

Bull-புல்-காளை Man-மேன்-மனிதன்

2. A Noun that denotes a female is said to be of the Feminine gender ; as

பெண் இனத்தைக் குறிக்கும் பெயர்கள் எல்லாம் ஃபெமினைன் ஜெண்டர் (Feminine gender) அல்லது பெண் பால் எனப்படும்.

உதாரணம் :

Girl-கேல்-சிறுமி, Lioness-லயனஸ்-பெண் சிங்கம், Heroine-ஹீரோயின்-வீரப்பெண், Sister-ஸிஸ்டர்-சகோதரி, Cow-கவ்-பசு, woman-உமன்-பெண்

3. Things without life are neither male nor female. Therefore a Noun that denotes neither a male nor a female is said to be of the Neuter Gender; as

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உயிரில்லாத பொருள்கள் ஆணும் இல்லை; பெண்ணும் இல்லை. ஆகவே ஆணையோ அல்லது பெண்ணையோ குறிக்காத அத்தகைய பெயர்ச் சொல் அஃறிணை (Neuter Gender-நியூட்டர் ஜெண்டர்) எனப்படும்.

உதாரணம் :

House-ஹவுஸ்-வீடு, Stone-ஸ்டோன்-கல், Book-புக்-புத்தகம், Pen-பென்-பேனு, Room-ரூம்-அறை, Tree-ட்ரீ-மரம்

4. A Noun that denotes either a male or a female is said to be of the Common Gender; as

ஆணையோ அல்லது பெண்ணையோ பொதுவாகக் குறிக்கும் பெயர்ச் சொல் (Common gender) 'பொதுப் பால்' எனப்படும்.

உதாரணம் :

Parent-பேரன்ட்-பெற்ருேர், Relative-ரிலேடிவ்-உறவினர், Infant-இன்ஃபன்ட்-சிசு, Orphan-ஆர்பன்-அநாதை

FEMININE NOUNS
பெண்பால் சொற்கள்

Masculine Gender (ஆண் பால்)	Feminine Gender (பெண் பால்)
Author-நூலாசிரியர் ஆதர்	Authoress-நூலாசிரியை ஆதரஸ்
Actor-நடிகன் ஆக்டர்	Actress-நடிகை ஆக்ட்ரஸ்
Prince-இளவரசன் பிரின்ஸ்	Princess-இளவரசி பிரின்ஸஸ்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Horse-குதிரை
ஹார்ஸ்

Giant-அசுரன்
ஜயன்ட்

God-தேவன்
காட்

Poet-கவிஞன்
போயட்

Tiger-ஆண்புலி
டைகர்

Lad-சிறுவன்
லேட்

Widower-தாரமிழந்தவன்
விடோயர்

Ram-ஆண் செம்மறி ஆடு
ரேம்

Man-ஆடவன்
மேன்

He goat-வெள்ளாட்டுக்கிடா
ஹி-கோட்

Land-lord-நிலச் சொந்தக் காரர்
லேண்ட் லார்ட்

Mare-பெண் குதிரை
மேர்

Giantess-அரக்கி
ஜயன்டஸ்

Goddess-தேவி
காடஸ்

Poetess-பெண் கவி
போயட்டஸ்

Tigress-பெண்புலி
டைக்ரஸ்

Lass-சிறுமி
லேஸ்

Widow-விதவை
விடோ

Ewe-பெண் செம்மறி ஆடு
ஈவ்

Woman-பெண்
உமென்

She goat-பெண் வெள்ளாடு
ஷி-கோட்

Land-lady-நிலச் சொந்தக் காரி
லேண்ட் லேடி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

NOUN பெயர்ச் சொல்—*NUMBER* எண்

When a Noun denotes one object it is said to be in the Singular Number; as

பெயர்ச் சொல் ஒரு பொருளைக் குறிக்கும்போது, அது ஒருமை எனப்படும். உதாரணம் :

Boy-சிறுவன், Girl-சிறுமி, Tree-மரம், Man-மனிதன், Ant-எறும்பு, Box-பெட்டி, Ox-எருது, Book-புத்தகம், Pen-பேனா, Fruit-பழம்

When a Noun denotes more than one object it is said to be in the Plural Number. Generally the Plural of Nouns is formed by adding-'s' to the Singular ; as

ஒன்றுக்கு மேற்பட்ட பொருளை ஒரு பெயர் குறிக்கும் போது, அது பன்மை எனப்படும். பொதுவாக ஒருமையில் உள்ள பெயர்ச் சொல்லுடன்-s சேர்த்தால், அது பன்மை யாகிவிடும். உதாரணம் :

Singular	Plural	Singular	Plural
Boy	Boys	Cow	Cows
Girl	Girls	River	Rivers
Book	Books	Stone	Stones
Pen	Pens	Star	Stars
Tree	Trees	Hill	Hills
Desk	Desks	Hand	Hands

But Nouns ending in s,-sh,-ch,-o,-x form the plural by adding-es to the Singular ; as

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

-s,-sh, -ch,-o, -x ஆகிய எழுத்துக்களுடன் முடியும் பெயர்ச் சொற்களின் ஒருமையுடன் (Singular-சிங்குலர்) es சேர்ந்தால் பன்மை (Plural-ப்ளூரல்) ஏற்படுகிறது.

உதாரணம் :

Singular	Plural	Singular	Plural
Class	Classes	Dish	Dishes
Branch	Branches	Tax	Taxes
Match	Matches	Fish	Fishes
Hero	Heroes	Fox	Foxes
Buffalo	Buffaloes	Mango	Mangoes
Negro	Negroes	Volcano	Volcanoes

Nouns ending in –y, preceded by a Consonant form their Plural by changing-y into–i and adding-es ; as

ஒரு பெயர்ச் சொல்லின் இறுதி எழுத்து y ஆக இருந்து அதற்கு முந்தின எழுத்து 'consonant' (மெய்யெழுத்து) ஆக இருப்பின் அந்த y-க்குப் பதிலாக-ies சேர்த்தால் பன்மை (Plural-ப்ளூரல்) ஏற்படும்.

உதாரணம் :

Singular	Plural	Singular	Plural
Duty	Duties	Baby	Babies
Fly	Flies	City	Cities
Army	Armies	Lady	Ladies

Several Nouns ending in -f-or–fe form their plural by removing-f or-fe and adding-es ; as

'f' அல்லது 'fe' இல் முடியும் பல பெயர்ச்சொற்களுக்குப் பன்மை (Plural), 'f' அல்லது 'fe' ஐ நீக்கி விட்டு 'ves' சேர்த்துவிடில் ஏற்படும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உதாரணம் :

Singular	Plural	Singular	Plural
Thief	Thieves	Loaf	Loaves
Wife	Wives	Life	Lives
Calf	Calves	Wolf	Wolves
Leaf	Leaves	Half	Halves

A few Nouns form their plural by changing the inside vowel of the singular ; as

சில பெயர்ச் சொற்களுக்குப் பன்மை, ஒருமையில் உள்ள உயிரெழுத்தை மாற்றுவதால் ஏற்படும். உதாரணம் :

Singular	Plural	Singular	Plural
Man	Men	Tooth	Teeth
Woman	Women	Mouse	Mice
Foot	Feet	Goose	Geese

ACTIVE VOICE: செய்வினை
PASSIVE VOICE: செயப்பாட்டு வினை

Compare the following sentences :

Govind *helps* Krishnan

Krishnan *is helped* by Govind

These two sentences have the same meaning.

But in sentence 1, the person denoted by the subject does something. The verb 'helps' is said to be Active voice.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மேலே கூறப்பட்டுள்ள இரு வாக்கியங்களேயும் ஒப்பு நோக்குவோம். இரு வாக்கியங்களுக்கும் ஒரேவிதமான பொருள்தான். ஆனல் முதல் வாக்கியத்தில் (எழுவாய்) குறிப்பிடும் நபர் ஏதோ ஒன்றைச் செய்கிறுர். 'helps-ஹெல்ப்ஸ்' என்ற வினைச் சொல் செய்வினை (Active voice-ஆக்டிவ் வாய்ஸ்) எனப்படும்.

In sentence 2, the form of the verb shows that something is done to the person denoted by the subject. Something is done to Krishnan (the person denoted by the subject). The verb 'is helped' is said to be in the Passive Voice.

2-ஆவது வாக்கியத்தில் (எழுவாய்) குறிப்பிடும் நபருக்கு ஏதோ செய்யப்பட்டுள்ளதாக வினைச் சொல்லின் அமைப்பிலிருந்து தெரிகிறது. கிருஷ்ணனுக்கு (எழுவாய் குறிப்பிடும் நபர்) ஏதோ செய்யப்படுகிறது. 'Is helped' என்ற வினைச் சொல் செயப்பாட்டு வினை (Passive Voice–பாஸிவ் வாய்ஸ்) என்று சொல்லலாம்.

More Examples—மேலும் உதாரணங்கள் :

Active Voice (செய்வினை)	**Passive Voice** (செயப்பாட்டுவினை)
The cat killed the Mouse	The mouse was killed by the cat
பூனே எலியைக் கொன்றது	பூனேயால் எலி கொல்லப் பட்டது
A dog bit a boy	A boy was bitten by a dog
ஒரு நாய் ஒரு சிறுவனேக் கடித்தது	ஒரு சிறுவன் ஒரு நாயால் கடிக்கப்பட்டான்

—15

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

All loved him

எல்லாரும் அவனை
நேசித்தார்கள்

He was loved by all

அவன் எல்லாராலும்
நேசிக்கப்பட்டான்

The boy made a kite

சிறுவன் ஒரு பட்டம்
செய்தான்

A kite was made by the boy

சிறுவனால் ஒரு பட்டம்
செய்யப்பட்டது

SHALL-ஷெல்: *WILL*-வில்

'Shall' and 'Will' are two important verbs. In dialogues these verbs are used more often than other words. If they are misplaced in sentences, the correct meaning will not be conveyed. Therefore it is quite necessary to acquire knowledge of proper usage of these words. They can be used as Principal Verbs and Auxiliary verbs.

'Shall-ஷெல்', 'Will-வில்' இவ்விரண்டும் முக்கியமான வினைச் சொற்கள். சம்பாஷணையில் இந்தச் சொற்கள் மற்றச் சொற்களைக் காட்டிலும் அடிக்கடி உபயோகிக்கப்படுகின்றன. வாக்கியங்களில் இவற்றைத் தவருக உபயோகித்தால் பொருள் மாறுபடும். ஆகவே இந்தச் சொற்களைச் சரிவர உபயோகிக்கத் தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். இவை முக்கிய வினைச்சொல்லாகவும் உபவினைச் சொல்லாகவும் உபயோகப்படும்.

I. Compare the following sentences:

கீழ்க்கண்ட வாக்கியங்களை ஒப்பு நோக்குக

1. **I shall meet you to-morrow**

ஐ ஷெல் மீட் யூ டுமாரோ

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

2. I will meet you to-morrow

ஐ வில் மீட் யூ டுமாரோ

The first sentence means "I am going to meet you to-morrow."

The second sentence means "I am determined to meet you to-morrow."

Now you know that 'shall' in the first person denotes simple futurity.

Will in the first person expresses determination.

முதல் வாக்கியத்தின் பொருள் :

'நாளை நான் உன்னைச் சந்திக்கப் போகிறேன்.

இரண்டாவது வாக்கியத்தின் பொருள் :

'நான் உன்னை நாளைச் சந்திக்க உறுதி கொண்டிருக்கிறேன்.'

இப்போது நீங்கள் தெரிந்து கொண்டிருப்பது: தன்மையில் (First Person) 'Shall-ஷெல்' வெறும் வருங்காலத்தையே குறிக்கும்.

தன்மையில் 'Will-வில்' உறுதியைக் காட்டும்.

II. Compare the following sentences :

கீழ்க்கண்ட வாக்கியங்களை ஒப்பு நோக்குக :

1. You shall meet me tomorrow

2. I know you will meet me to-morrow

The first sentence means "you will be compelled to meet me to-morrow."

The second sentence means "I know you are going to meet me to-morrow."

முதல் வாக்கியத்தின் பொருள் : நீ என்னை நாளைக்குச் சந்திக்குமாறு கட்டாயப்படுத்தப் படுவாய்."

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இரண்டாவது வாக்கியத்தின் பொருள் :

நாளை என்னை நீ சந்திக்கப் போகிறாய் என்பது எனக்குத் தெரியும்.

III. Compare the following sentences :

கீழ்க்கண்ட வாக்கியங்களை ஒப்பு நோக்குக.

1. He shall meet me to-morrow.
2. I know he will meet me to-morrow.

The first sentence means "He shall be compelled to meet me to-morrow."

The seoond sentence means "I know he is going to meet me to-morrow."

Now you know that "Shall" in the second and third person expresses determination. 'Will' in the second and third Person expresses a simple futurity.

மேலே குறிப்பிடப்பட்ட இரு வாக்கியங்களை நோக்குவோம். முதல் வாக்கியத்தின் பொருள்: 'நாளை அவன் என்னைச் சந்திக்குமாறு கட்டாயப்படுத்தப்படுவான்.'

இரண்டாவது வாக்கியத்தின் பொருள் :

'நாளை அவன் என்னைச் சந்திக்கப் போகிறான் என்பது எனக்குத் தெரியும்.'

ஆகவே நீங்கள் தெரிந்து கொண்டிருப்பது: 'Shall' என்ற சொல் முன்னிலையிலும் (Second-Person-செகன்ட் பர்ஸன்), படர்க்கையிலும் (Third Person-தேர்ட் பர்ஸன்) உறுதியைக் காட்டுகிறது. 'Will' என்ற சொல் முன்னிலையிலும் (Second person), படர்க்கையிலும் (Third Person) வெறும் வருங்காலத்தைக் காட்டுகிறது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

CASE-வேற்றுமை

Nouns in English are said to have three cases—1. The Nominative case; 2. The Objective case; 3. The Possessive case.

ஆங்கில மொழியில் பெயர்ச் சொற்களுக்கு (Nouns-நவுன்ஸ்) மூன்று வேற்றுமைகள் (cases-கேஸஸ்) உள்ளன. 1. எழுவாய் வேற்றுமை (Nominative case-நாமினேடிவ் கேஸ்) 2. செயப்படுபொருள் வேற்றுமை (Objective case-அப்ஜெக்டிவ் கேஸ்) 3. உடைமை வேற்றுமை (Possessive case-பொஸஸிவ் கேஸ்).

உதாரணங்கள் :

1. The man killed a snake

   அந்த மனிதன் பாம்பைக் கொன்றான்.

இந்த வாக்கியத்தில் 'The man–*அந்த மனிதன்*' என்பது எழுவாய் வேற்றுமையில் (Nominative case-*நாமினேடிவ்* கேஸ்) உள்ளது.

2. The man killed a rat

   அந்த மனிதன் எலியைக் கொன்றான்.

இந்த வாக்கியத்தில் 'Rat–*எலி*' என்ற சொல் செயப்படு பொருள் வேற்றுமையில் (Objective case-*அப்ஜெக்டிவ்* கேஸ்) இருப்பதாகச் சொல்லலாம்.

3. **The rat's tail**

   எலியின் வால்

இந்த வாக்கியத்தில் **'The rat's'** என்ற சொல் உடைமை வேற்றுமையில் (**Possessive case**-பொஸஸிவ் கேஸ்) உள்ளது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

A, AN, THE

The words 'a' and 'an' have the same meaning. 'A' means 'an' and 'An' means 'a'. But there are differences in their usage. One should learn the correct usage. This is essential to speak and write grammatically correct English.

'A-எ', 'An-ஏன்' இந்த இரு சொற்களுக்கும் ஒரே பொருள் தான். எனினும் அவற்றை உபயோகிப்பதில் அதிக வேற்றுமை இருக்கிறது. ஆகவே இந்தச் சொற்களைச் சரிவர உபயோகப்படுத்துவதற்குத் தெரிந்து கொள்ள வேண்டும். இலக்கணப் பிழையின்றி ஆங்கிலம் பேசவும், எழுதவும் தெரிந்துகொள்ள இதைப் புரிந்து கொள்ள வேண்டியது மிக அவசியம்.

The choice between 'a' and 'an' is determined by sound. Before a word beginning with a vowel sound 'an' is used; as

'A-எ', 'An-ஏன்' இவற்றில் ஒரு சொல்லுக்கு முன்பு எதை உபயோகிப்பது என்பது உச்சரிப்பைப் பொருத்தது, உயிரெழுத்து ஒலியுடன் ஆரம்பமாகும் சொல்லுக்கு முன்பு **'An-ஏன்'** உபயோகப்படுத்த வேண்டும். உதாரணம் :

An ass - ஒரு கழுதை, **An apple** - ஓர் ஆப்பிள்பழம், **An inkstand** - ஒரு மைக்கூடு, **An umbrella** – ஒரு குடை, **An hour** – ஒரு மணி, **An honest man** – ஒரு நாணயமான மனிதன், **An heir** - ஒரு வாரிசு.

Before a word beginning with a consonant sound 'a' is used ; as

Sri Vidyabharathi Book Centre, Sringeri

மெய்யெழுத்துடன் ஆரம்பமாகும் சொல்லுக்கு முன்பு 'a' உபயோகப்படுகிறது.

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உதாரணம் :

A boy - ஒரு சிறுவன், A woman - ஒரு பெண், A flower - ஒரு மலர், A hare - ஒரு முயல், A reindeer – ஒரு கலைமான்.

ARTICLES

'The' is called the Definite Article in grammar ; 'A' or 'An' is called the Indefinite Article.

The Definite Article 'The' is used when we speak of a particular person or thing, or one already referred to ; as

இலக்கணத்தில் 'The–தி' என்பது டெஃபனிட் ஆர்ட்டிகிள் என்று அழைக்கப்படுகிறது. (A-எ, An-ஏன் இவ்விரண்டும் இன்டெஃப்னிட் ஆர்ட்டிகிள் எனப்படும்.)

உதாரணம் :

The book you want is here

நீ விரும்பும் அந்தப் புத்தகம் இங்கு இருக்கிறது

Let us go to the temple

நாம் கோவிலுக்குச் செல்வோம்

The gentleman I met is your relative

நான் சந்தித்த கனவான் உனது உறவினர்

Be—பி—இரு

The various forms of the verb 'be' are :

am, is, are, was, been and being.

'Be-பி' என்ற வினைச்சொல்லுக்கு 'இரு', 'தங்கி இரு,' 'வாழ்' என்றெல்லாம் பொருள் உண்டு. அதன் பல்வேறு வடிவங்கள் வருமாறு ;

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Am – ஆம் - இருக்கிறேன், Is - இஸ் - இருக்கிறது, Are - ஆர் - இருக்கின்றன. Was - வாஸ் - இருந்தது, Were - இருந்தன.

USES OF SHOULD & WOULD

The verbs Should and Would are the Past tenses of Shall and Will, respectively ; as

Should - ஷுட், Would - உட் என்ற வினைச் சொற்கள், முறையே 'Shall-ஷெல்,' 'Will - வில்' என்ற வினைச் சொற்களின் இறந்த காலம்.

உதாரணம் :

1, I told him that I should start to-morrow

நாளைக்கு நான் புறப்படவேண்டும் என்று அவனிடம் சொன்னேன்.

2. He was afraid he should be drowned

நீரில் தான் மூழ்கக்கூடுமோ என்று அவன் அஞ்சினான்

3. She said he would come

அவன் வருவான் என்று அவள் சொன்னாள்

4. You said you would win the prize

நீ பரிசு பெற்றுவிடுவாய் என்று சொன்னாய்

In ordinary direct speech should in the sense of ought to, is used in all three persons. 'Would' is used with the idea of intention, determination in all three persons : as

சாதாரண நேர்முகப் பேச்சில் 'should-ஷுட்' என்ற சொல் 'ought to' (கட்டாயமாக வேண்டியதாகும்) என்ற சொல்லின் பொருளில் தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மூன்று வேற்றுமைகளிலும் உபயோகிக்கப்படுகிறது. 'would-உட்' என்ற சொல் மூன்று வேற்றுமைகளிலும் உத்தேசம், உறுதி இவற்றைக் காட்டுவதற்கு உபயோகிக்கப்படுகிறது. உதாரணம் :

1. I should have attended the marriage, but I forgot it.

   நான் திருமணத்திற்கு வந்திருக்கவேண்டும், ஆனால் மறந்துவிட்டேன்.

2. You should help the poor

   நீ ஏழைகளுக்கு உதவ வேண்டும்.

3. He should have answered the letter yesterday

   கடிதங்களுக்கு அவன் நேற்று பதில் எழுதியிருக்க வேண்டும்.

4. Children should obey their parents

   குழந்தைகள் தமது பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

5. He would have his own way

   அவன் தனது இஷ்டம் போலவே செய்வான்

MUST—மஸ்ட்-வேண்டும்

'Must-மஸ்ட்' என்ற சொல்லுக்கு 'வேண்டும்', 'செய்து தீரவேண்டிய நிலை' என்று பொருள். தேவை, பொறுப்பு, உறுதி, வேறு வழியில்லாத நிர்ப்பந்த நிலை முதலிய பொருள்களைக் குறிப்பதற்கு 'Must' என்ற சொல் உபயோகிக்கப்படுகிறது. காலம் (Tense-டென்ஸ்), இடம் (Person-பர்ஸன்),

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

எண் (Number-நம்பர்) இந்த மூன்றிலும் Must-மஸ்ட் என்ற சொல்லின் வடிவம் மாறுவதில்லை. உதாரணம் :

1. We must obey the laws
   வி மஸ்ட் ஒபே தி லாஸ்
   நாம் சட்டங்களுக்குப் பணிய வேண்டும்

2. I must have my share
   ஐ மஸ்ட் ஹேவ் மை ஷேர்
   நான் எனது பங்கைப் பெறவேண்டும்

3. One must work or starve
   ஒன் மஸ்ட் ஒர்க் ஆர் ஸ்டார்வ்
   வேலை செய்யவேண்டும், இல்லையேல் பட்டினி

4. Judges must be upright
   ஜட்ஜஸ் மஸ்ட் பி அப்ரைட்
   நீதிபதிகள் நேர்மையாக இருக்கவேண்டும்

CAN-கேன், *COULD*-குட்

'Can-கேன்' என்ற சொல்லுக்குத் 'தேவையான ஆற்றல் பெற்றிரு' என்று பொருள் :

உதாரணம் :

I can ride
ஐ கேன் ரைட்
என்னால் சவாரி செய்ய முடியும்

We can speak Telugu
வி கேன் ஸ்பீக் டெலுகு
எங்களால் தெலுங்கு பேச முடியும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

I can help You

ஐ கேன் ஹெல்ப் யூ

நான் உனக்கு உதவி செய்ய முடியும்

I can swim—ஐ கேன் ஸ்விம்

என்னால் நீந்த முடியும்

'Could–குட்' is the past tence form of 'Can'. Could-குட் என்ற சொல் 'can-கேன்' என்ற வினையின் இறந்தகால வடிவமாகும்.

DEGREES OF COMPARISON

பெயரடை ஒப்பளவுகள்

Read the following sentences :

1. Rama's mango is sweet
2. Krishna's mango is sweeter
3. Gopal's mango is the sweetest

கீழ்க்கண்ட வாக்கியங்களைப் படிக்கவும்

1. ராமனுடைய மாம்பழம் இனிப்பாக உள்ளது.
2. கிருஷ்ணனுடைய மாம்பழம் இன்னும் அதிக இனிப்பாக இருக்கிறது.
3. கோபாலனின் மாம்பழம் மற்ற எல்லாவற்றையும் விட இனிப்பானது.

In sentence 1, the adjective 'sweet' merely tells that Rama's mango has the quality of sweetness. But it does not say how much of this quality it has.

முதல் வாக்கியத்தில் 'ஸ்வீட்' என்ற பெயரடைச் சொல், ராமனின் மாம்பழத்துக்கு இனிப்புத் தன்மை இருப்பதாக

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மாத்திரம் சொல்கிறது. ஆனால் இனிப்புத் தன்மை எவ்வளவு இருக்கிறது என்று அது சொல்லவில்லை.

In sentence 2, the adjective 'sweeter' tells tha Krishna's mango, compared with Rama's has more of quality of sweetness.

2-ஆவது வாக்கியத்தில், ராமனின் மாம்பழத்தை ஒப்பிடுகையில் கிருஷ்ணனுடைய மாம்பழத்தில் இனிப்புத் தன்மை இன்னும் அதிக அளவில் இருப்பதாக 'ஸ்வீட்டர்' என்னும் பெயரடைச் சொல் கூறுகிறது.

In sentence 3, the adjective 'sweetest' tells that of all these mangoes, Gopal's mango has the greatest amount or highest degree of the quality of sweetness.

3–ஆவது வாக்கியத்தில், இந்த மாம்பழங்கள் அனைத்திலும் கோபாலுடைய மாம்பழத்துக்கு மிக அளவில் அல்லது உச்ச நிலையில் இனிப்புத்தன்மை உள்ளது என்பதை 'ஸ்வீட்டஸ்ட்' என்ற பெயரடைச் சொல் தெரிவிக்கிறது.

We thus see that Adjectives change in form (sweet, Sweeter, sweetest) to show comparsion. They are called the three Degrees of comparison.

ஆகவே பெயரடைச் சொற்கள் ஒப்பளவைக் காட்டுவதற்காகத் தனது வடிவத்தில் மாறுகின்றன. (ஸ்வீட், ஸ்வீட்டர், ஸ்வீட்டஸ்ட்) அவை மூன்று வகை ஒப்பளவுகள் எனப்படும்.

The Adjective 'sweet' is said to be in the Positive Degree.

'ஸ்வீட்' என்னும் பெயரடைச் சொல் பாஸிட்டிவ் ஒப்பளவில் இருப்பதாகச் சொல்லலாம். அதாவது மாம்பழத்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தின் வெறும் இயற்கைக் குணத்தை மாத்திரம் தெரிவிக்கும் பெயரடைச் சொல்.

The Adjective 'sweeter' is said to be in the Comparative Degree.

'ஸ்வீட்டர்' என்ற பெயரடைச் சொல் 'கம்பேரட்டிவ்' ஒப்பளவில் இருப்பதாகச் சொல்லலாம். அதாவது இனிப்புக் குணத்தில் சிறிது அதிகமானதைக் குறிக்கும்.

The Adjective 'sweetest' is said to be in the Superlative Degree.

'ஸ்வீட்டஸ்ட்' என்ற பெயரடைச் சொல் சூப்பர் லேட்டிவ் ஒப்பளவில் அல்லது இனிப்புக் குணத்தில் உச்ச நிலையில் இருப்பதாகச் சொல்லலாம்.

Following are the examples of three Degrees of Comparison.

பெயரடைச் சொற்களின் மூன்று வகை ஒப்பளவுகளுக்கு உதாரணங்கள் :

Positive	Comparative	Surperlative
(பாசிட்டிவ்)	(கம்பேரட்டிவ்)	(சூப்பர்லேட்டிவ்)
Good	Better	Best
குட்	பெட்டர்	பெஸ்ட்
Bad	Worse	Worst
பேட்	வொர்ஸ்	வொர்ஸ்ட்
Little	Less, Lesser	Least
லிட்டில்	லெஸ், லெஸ்ஸர்	லீஸ்ட்
Old	Older	Oldest
ஓல்டு	ஓல்டர்	ஓல்டஸ்ட்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Positive (பாஸிட்டிவ்)	Comparative (கம்பேரட்டிவ்)	Superlative (சூப்பர்லேட்டிவ்)
Much மச்	More மோர்	Most மோஸ்ட்
Many மெனி	More மோர்	Most மோஸ்ட்
Small ஸ்மால்	Smaller ஸ்மாலர்	Smallest ஸ்மாலஸ்ட்
Thick திக்	Thicker திக்கர்	Thickest திக்கஸ்ட்
Bold போல்டு	Bolder போல்டர்	Boldest போல்டஸ்ட்
Light லைட்	Lighter லைட்டர்	Lightest லைட்டஸ்ட்
Great கிரேட்	Greater கிரேட்டர்	Greatest கிரேட்டஸ்ட்
Deep டீப்	Deeper டீப்பர்	Deepest டீப்பஸ்ட்
Loud லவ்ட்	Louder லவ்டர்	Loudest லவ்டஸ்ட்
Hot ஹாட்	Hotter ஹாட்டர்	Hottest ஹாட்டஸ்ட்
Happy ஹேப்பி	Happier ஹேப்பியர்	Happiest ஹேப்பியஸ்ட்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Positive	Comparative	Superlative
(பாஸிட்டிவ்)	(கம்பேரட்டிவ்)	சூப்பர்லேட்டிவ்)
Great கிரேட்	Greater கிரேட்டர்	Greatest கிரேட்டஸ்ட்
Merry மெர்ரி	Merrier மெர்ரியர்	Merriest மெர்ரியஸ்ட்
Clever கிளவர்	Cleverer கிளவரர்	Cleverest கிளவரஸ்ட்
Easy ஈஸி	Easier ஈஸியர்	Easiest ஈஸியஸ்ட்
Red ரெட்	Redder ரெட்டர்	Reddest ரெட்டஸ்ட்
Heavy ஹெவி	Heavier ஹெவியர்	Heaviest ஹெவியஸ்ட்
Sad ஸேட்	Sadder ஸேடர்	Saddest ஸேடஸ்ட்
Able ஏபிள்	Abler ஏபிளர்	Ablest ஏபிளஸ்ட்
Sweet ஸ்வீட்	Sweeter ஸ்வீட்டர்	Sweetest ஸ்வீட்டஸ்ட்
Wealthy வெல்தி	Wealthier வெல்தியர்	Wealthiest வெல்தியஸ்ட்
Soon சூன்	Sooner சூனர்	Soonest சூனஸ்ட்
Long லாங்	Longer லாங்கர்	Longest லாங்கஸ்ட்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Positive (பாஸிட்டிவ்)	**Comparative** (கம்பேரட்டிவ்)	**Superlative** (சூப்பர்லேட்டிவ்)
Near நியர்	Nearer நியரர்	Nearest நியரஸ்ட்
Far ஃபார்	Farther ஃபர்தர்	Farthest ஃபர்தஸ்ட்
Late லேட்	Later லேட்டர்	Latest or Last லேட்லஸ்ட் (அ) லாஸ்ட்
Beautiful பியூட்டிஃபுல்	More beautiful மோர் பியூட்டிஃபுல்	Most beautiful மோஸ்ட் பியூட்டிஃபுல்
Splendid ஸ்ப்ளென்டிட்	More splendid மோர் ஸ்ப்ளென்டிட்	Most splendid மோஸ்ட் ஸ்ப்ளென்டிட்
Difficult டிஃபிகல்ட்	More difficult மோர் டிஃபிகல்ட்	Most difficult மோஸ்ட் டிஃபிகல்ட்
Couraegous கரேஜியஸ்	More courageous மோர் கரேஜியஸ்	Most courageous மோஸ்ட் கரேஜியஸ்
Industrious இன்டஸ்ட்ரியஸ்	More industrious மோர் இன்டஸ்ட்ரியஸ்	Most industrious மோஸ்ட் இன்டஸ்ட்ரியஸ்
Learned லேன்ட்	More learned மோர் லேன்ட்	Most learned மோஸ்ட் லேன்ட்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

SILENT LETTERS

மவுன எழுத்துக்கள்

சில ஆங்கிலச் சொற்களில் உச்சரிப்பில் வராமல் மவுன மாக எழுத்துக்கள் உள்ளன. ஆகவே, அந்தச் சொற்களை உச்சரிக்கையில் கவனம் அவசியம். உதாரணமாக, கீழே தரப்பட்டுள்ள சொற்களில் 'இட்டாலிக்ஸ்' எழுத்துக்களுக்கு உச்சரிப்புக் கிடையாது.

Aw*e*
ஆ
மலைப்பு

Ag*h*ast
அகாஸ்ட்
திகிலடைந்த

Com*b*
கோம்
சீப்பு

Dum*b*
டம்
ஊமையான

De*a*f
டெஃப்
செவிடான

Bom*b*
பாம்
வெடி குண்டு

Dou*b*t
டவுட்
சந்தேகம்

Thum*b*
தம்
கட்டைவிரல்

Tomb
டூம்
கல்லறை

Sto*r*m
ஸ்டாம்
புயற்காற்று

Lea*r*n
லேன்
கற்றுக் கொள்

Handsome
ஹேன்ஸம்
அழகான

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Lamb
லேம்
செம்மறியாட்டுக்குட்டி

Sign
சைன்
அடையாளம்

Debt
டெட்
கடன்

Hour
அவர்
மணி

DIRECT SPEECH-INDIRECT SPEECH

நேர்முக உரை-மறைமுக உரை

The words of a speaker may be reported in two ways:

ஒருவர் பேசும் சொற்களை இரு முறைகளில் எடுத்துக் கூறலாம்.

1. We may quote his actual words. This is called *Direct Speech.*

அவர் பேசிய சொற்களை அவர் பேசுவது போலவே சொல்வது ஒரு முறை. இது 'நேர்முக' உரை எனப் படுவது.

We may report what he said without quoting his exact words. This is called *Indirect Speech.*

அவர் சொன்ன சொற்களை அவர் சொல்வதுபோல் அப்படியே சொல்லாமலும் தெரிவிக்கலாம். இந்த இரண்டாவது முறை 'மறைமுக உரை' எனப்படுவது.

Direct speech.

Krishnan said, "I am very ill now."

கிருஷ்ணன் கூறினான்: "நான் மிகவும் நோயுற்றிருக் கிறேன்."

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Indirect speech:

Krishnan said that he was very ill then.

தான் மிகவும் நோயுற்றிருப்பதாகக் கிருஷ்ணன் கூறினன்.

In the Direct Speech we use inverted Commas to point out the exact words of the speaker. In Indirect speech we do not use inverted Commas.

பேசியவரின் சொற்களை அப்படியே எடுத்துக் காட்டுவதற்காக 'இன்வர்ட்டட் கமா'க்களை நேரடி உரையில் உபயோகிக்கிறோம். மறைமுக உரையில் 'இன்வர்ட்டட் கமா'க்களை உபயோகிப்பது இல்லை.

We have made the following changes while changing the above Direct speech into Indirect speech.

மேற்கூறிய நேரடி உரையை மறைமுக உரையாக மாற்றுகையில் கீழ்க்கண்ட மாறுதல்களைச் செய்ய வேண்டும்.

1. The conjunction 'that' is used before the indirect statement.

மறைமுக உரைக்கு முன்பு 'That'-தட்' என்னும் இணைப்புச் சொல்லை உபயோகித்துள்ளோம்.

2. The Pronoun 'I' is changed to 'he'. (The first person is changed to third person).

'ஐ-நான்' என்னும் தன்மைப் பிரதிப் பெயர்ச்சொல் 'ஹி-அவன்' என்னும் படர்க்கை பிரதிப் பெயர்ச் சொல்லாக மாற்றப்பட்டிருக்கிறது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

3. The verb 'am' is changed to 'was' (Present Tense is changed to Past Tense)

'Am-ஆம்' என்ற நிகழ்கால வினைச்சொல் 'was-வாஸ்' என்னும் இறந்தகால வினைச் சொல்லாக மாற்றப்பட்டுள்ளது.

4. The Adverb 'Now' is changed to Adverb 'then'

'Now-நவ்' என்னும் வினை எச்சம் 'Then-தென்' என்னும் வினை எச்சமாக மாற்றப்பட்டுள்ளது.

Now and then நவ்-அன் தென் என்ற இரண்டு வினையெச்சங்களும் சில நேரங்களில் சேர்ந்தே Adjective (பெயரிடைச் சொல்) ஆக வரும்.

உதாரணமாக :

Now and then there was some noise coming from the middle of the Crowd.

நவ் அன் தென் தேர் வாஸ் ஸம் நாய்ஸ் கமிங் ஃபிரம் தி மிடில் ஆஃப் தி கிரவுட்

இடையிடையே கூட்டத்தின் நடுவிலிருந்து ஏதோ சத்தம் வந்து கொண்டே இருந்தது.

Now and then he watched his son

நவ் அன் தென் ஹி வாச்ட் ஹிஸ் சன்

அவ்வப்போது அவன், தன் மகனைக் கவனித்து வந்தான்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

(We have written in the following pages about some subjects which will come across in your life often. We have adopted a novel method of presenting this in the form of conversation and question and answer form. This section will help you to form sentences and for conversation.)

(உங்கள் வாழ்க்கையில் அடிக்கடி வரும் சில விஷயங்களைப் பற்றி அடுத்த பக்கங்களில் எழுதியிருக்கிறோம். சம்பாஷணை முறையிலும் கேள்வி - பதில் முறையிலும் இவற்றை அமைத்திருக்கிறோம். வாக்கியங்களை அமைக்கவும் சம்பாஷிக்கவும் இந்தப் பகுதி உங்களுக்கு உதவும்.)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Marina Beach

This is Marina Beach.

It is famous and lovely.

This is one of the best beaches in the world.

To the east of Madras is the sea.

Have you gone to the beach, Ramu?

Yes. I had been there with my friends.

Are you regularly going to the beach?

No. whenever we have leisure, we use to go.

Young and old are visiting the beach, daily during summer.

They get fresh air and cool breeze.

Sea breeze is good for health.

Children are playing in the Beach sand.

Some people buy and eat some snacks.

People forget their worries in the beach.

They enjoy the onrushing waves, the stars and the rising moon in the horizon.

There are two swimming pools near Marina.

Did you find anything interesting in the beach, Ramu?

Yes. I have seen many beautifully coloured shells and Conches.

Fishermen are living near the shore.

They use to go out into the sea in catamarans for fishing.

People who eat fish will buy from them.

The crowd will enjoy music and dramas, broadcast through the loudspeaker.

For the conjested city life, the beach is like a Paradise.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மெரினுக் கடற்கரை

இது மெரினுக் கடற்கரை.

இது அழகானது; புகழ் பெற்றது.

உலகின் அழகிய கடற்கரைகளில் இதுவும் ஒன்று.

சென்னையின் கிழக்குப் பக்கம் கடல் இருக்கிறது.

ராமு, நீ கடற்கரைக்குப் போயிருக்கிருயா?

நான் என் நண்பர்களுடன் அங்கே போயிருக்கிறேன்.

பீச்சுக்கு வழக்கமாக நீ போவதுண்டா?

இல்லை. ஓய்வாக இருக்கும்போது நாங்கள் போவோம்.

இளைஞர்களும் முதியவர்களும் கோடைக் காலத்தில் தினம் பீச்சுக்குப் போகிருர்கள்.

சுத்தமான, குளிர்ந்த கடற்காற்றை அவர்கள் பெறுகிருர்கள்.

கடற்காற்று உடம்புக்கு ஆரோக்கியத்தைத் தரும்.

கடற்கரை மணலில் குழந்தைகள் விளையாடுவார்கள்.

சிலர் தின்பண்டங்கள் வாங்கிச் சாப்பிடுவார்கள்.

தங்கள் கவலைகளை மறந்து மக்கள் மகிழ்வார்கள்.

கரையில் வந்து மோதும் அலைகளையும் விண்மீன்களையும் அடிவானத்தில் எழும் சந்திரனையும் கண்டு களிப்பார்கள்.

மெரினுவுக்கு அருகில் இரண்டு நீச்சல் குளங்கள் உள்ளன.

பீச்சில் ஏதாவது கவர்ச்சியான பொருளைப் பார்த்திருக்கிருயா ராமு?

அழகிய வண்ணங்களுடன் கூடிய கிளிஞ்சல்களையும் சிறிய சங்குகளையும் பார்த்திருக்கிறேன்.

கடற்கரையில் பரதவர்கள் வாழ்கிருர்கள்.

கட்டுமரங்களில் அவர்கள் கடலில் போய் மீன் பிடிப்பார்கள்.

மீன் சாப்பிடும் சிலர் அவர்களிடம் மீன் வாங்குவார்கள்.

பீச்சில் ஒலிபரப்பப்படும் சங்கீதத்தையும் நாடகங்களையும் மக்கள் கேட்டு மகிழ்வார்கள்.

நெருக்கடி நிறைந்த நகரவாழ்வுக்கு, பீச் சொர்க்கம் போன்றது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Post Office

Where are you going, Balu?

Oh, Raja! I am going to the Post Office.

Why do you go there?

I want to purchase Post cards and covers.

Will you accompany me?

No. I am going to the school now. I shall come with you tomorrow.

Tomorrow is a holiday for the Post Office being a Sunday.

Can't the Post Office wo k on Sunday also?

No. But they sell Postcards, Covers and Stamps in the evenings.

Mobile Post Office will work after working hours.

We can post urgent letters.

We are writing letters to our relatives and friends who are far away.

We post letters in the Post Box.

The Postman collects all the letters from the box.

They sort the letters according to the destinations.

The Postman put all of them seperately in a gunny bag.

The mail van took the bundles to the Railway station.

There are separate compartments in the train for mails.

Sorters who work in the mail van, distribute the mail bags to the respective stations.

The Runner will come to the station and collect the bags.

They open the bags and sort letters, Money orders, Register letters and Parcels.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தபால் நிலையம்

பாலு, நீ எங்கே போகிறாய்?

ராஜாவா, நான் அஞ்சலகம் போகிறேன்.

நீ ஏன் அங்கே போகிறாய்?

சில கவர்களும், கார்டுகளும் வாங்கப் போகிறேன்.

நீயும் என்னுடன் வருகிறாயா?

இல்லை. இப்போது நான் பள்ளி செல்கிறேன். நாளைக்கு உன்னுடன் வருகிறேன்.

நாளைக்கு ஞாயிற்றுக் கிழமையானதால் தபால் நிலையத்துக்கு விடுமுறை.

ஞாயிற்றுக்கிழமையில் தபால் நிலையம் வேலை செய்யாதா?

செய்யாது. ஆனால் மாலை வேளையில் கார்டும், தபால் தலைகளும், கவர்களும் மட்டும் விற்பார்கள்.

நடமாடும் தபால் நிலையம் மாலை வேளையில் செயற்படும்.

அவசரக் கடிதங்களை அதில் போடலாம்.

வெகு தூரத்திலுள்ள நம் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் நாம் கடிதம் எழுதுகிறோம்.

தபால் பெட்டியில் கடிதங்களைப் போடுகிறோம்.

தபால்காரர் பெட்டியிலிருந்து எல்லாக் கடிதங்களையும் எடுக்கிறார்.

ஊர் வாரியாகக் கடிதங்களைத் தனித் தனியாகப் பிரிக்கிறார்.

தனித் தனிப் பைகளில் அந்தக் கடிதங்களைப் போட்டுக் கட்டுகிறார்கள்.

தபால் வண்டி அந்தக் கட்டுகளை ரெயில் நிலையத்துக்கு எடுத்துச் செல்கிறது.

புகை வண்டியில் தபாலுக்காக, தனிப் பெட்டிகள் உள்ளன.

ரெயிலில் இருக்கும் ஊழியர், அந்த அந்த ஊருக்குரிய கட்டுகளை அங்கே அங்கே கொடுக்கிறார்.

தபால் ஊழியர் ஸ்டேஷனுக்குச் சென்று அந்தத் தபால் பைகளைப் பெற்றுக் கொள்கிறார்.

கடிதங்களையும், மணியார்டர்களையும், ரிஜிஸ்தர் கடிதங்களையும், பொட்டலங்களையும் அஞ்சலகத்தில் தனித் தனியாகப் பிரிக்கிறார்கள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Pin code is introduced to fecilitate quick delivery of the mails.

The Post man delivers letters at your door.

Is it not Interesting, Raja?

Yes, Balu! The journey of letters is very interesting.

We can open a Savings Bank account in the Post Office as in Banks.

Savings is a good habit and it will be helpful in need.

Is there any other service in the Post Office?

Yes. We can book and receive Telegrams in case of urgency.

Zoo

(In a class room)

Teacher: Have you ever gone to the zoo, Ramu?

Ramu: No. Sir!

Kamala: I went several times there, Sir. It is very interesting.

Ramu: What is there to interest us?

Kamala: It is a fine place. All kinds of animals, birds and reptiles are kept there.

Teacher: Shall we go one day to the zoo?

All Pupils: Oh, yes. we must go, Sir.

Kamala: There are Lions, Tigers, Panthers, Elephants and Bears. The Giraffe is a very strange looking animal. It has a long neck.

Ramu: Then what?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதங்களை விரைவில் பட்டுவாடாச் செய்வதற்காக ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வோர் எண்ணை ஒதுக்கியிருக்கிறார்கள்; அதற்குப் 'பின்கோடு' என்று பெயர்.

தபால்காரர் கடிதங்களை உங்கள் வீட்டில் கொண்டு வந்து கொடுக்கிறார்.

ராஜா, நீ சொல்வது ரொம்பவும் சுவையாக இருக்கிறதே!

ஆமாம்,பாலு! கடிதங்களின் பிரயாணம் சுவையானதுதான்.

பாங்கைப் போலவே தபால் நிலையத்திலும் சிறுசேமிப்புக் கணக்குத் தொடங்கலாம்.

சேமிக்கும் வழக்கம் சிறந்தது; அவசர காலத்தில் உதவும்.

தபால் நிலையத்தில் இதைத் தவிர வேறு ஏதாவது உண்டா?

நெருக்கடி நேரத்தில் தந்தி கொடுக்கலாம்; அல்லது நமக்கு வந்த தந்தியைப் பெறலாம்.

மிருகக் காட்சிச் சாலை

(வகுப்பறையில்)

ஆசிரியர் : ராமு, மிருகக் காட்சிச்சாலைக்கு நீ போயிருக்கிறாயா?

ராமு : இல்லை, ஐயா!

கமலா : நான் பல தடவை போயிருக்கிறேன். மிகவும் சுவையான இடம்.

ராமு : அப்படி என்ன அங்கே ரசிக்கும்படியாக இருக்கிறது?

கமலா : அழகான சூழ்நிலை. பலவிதமான மிருகங்களும், பறவைகளும், ஊர்வனமும் அங்கே உள்ளன.

ஆசிரியர் : நாமும் ஒருநாள் அங்கே போகலாமா?

எல்லா மாணவர்களும் : நிச்சயம் எல்லாரும் போகவேண்டும், ஐயா.

கமலா : அங்கே சிங்கம், புலி, சிறுத்தைப் புலி, யானை, கரடி எல்லாம் இருக்கின்றன. ஒட்டைச் சிவிங்கி பார்க்க வேடிக்கையாக இருக்கும். நீண்ட கழுத்தை அது பெற்றிருக்கிறது.

ராமு : இன்னும் என்ன இருக்கின்றன?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Kamala: You can see Parrots, Dears and many varities of Snakes.

Ramu: How do they keep them?

Kamala: They keep them in separate cages. There are covered enclosures attached to each cage.

Ramu: Why are they provided?

Kamala: The animals will come out for light, water and for rest.

Teacher: Please bring 50 n.p. each for expenses.

Kamala: We have to buy entrance ticket, Sir.

Teacher: Yes. They will give concession for the students.

Ramu: Can we see all the animals in an hour, Sir?

Kamala: No, No! It can take more than four hours to go around.

Teacher: There is a big pond inside the zoo.

Kamala: Yes, Sir! I have seen that. There are some boats also in the pond. We can have a jolly ride.

Ramu: Shall we give anything to the animals?

Kamala: Some visitors use to give fruits and peas to some animals and birds.

Teacher: But it is not right, Ramu!

Kamala: We should not also give troubles to the animals.

Teacher: Yes, We should be kind to them. They are also like us.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கமலா : பச்சைக்கிளி, மான்கள், பலவகைப் பாம்புகள் எல்லாம் பார்க்கலாம்.

ராமு : இத்தனையையும் அங்கே எப்படிக் காப்பாற்று கிறார்கள்?

கமலா : தனித்தனிக் கூண்டுகளில் வைத்திருக்கிறார்கள். கூண்டுகளை ஒட்டிக் கம்பிவலை பின்னிய திறந்த வெளியும் இருக்கிறது.

ராமு : அவை எதற்காக?

கமலா : மிருகங்கள் வெளிச்சத்துக்கும் தண்ணீருக்கும் அந்தத் திறந்த வெளியில் வந்து வந்து போகும்.

ஆசிரியர்: செலவுக்காக ஒவ்வொருவரும் 50 பைசா கொண்டு வாருங்கள்.

கமலா : உள்ளே போக அநுமதிச் சீட்டு காசு கொடுத்து வாங்க வேண்டும்.

ஆசிரியர்: ஆமாம். மாணவர்களுக்குச் சலுகை உண்டு.

ராமு : எல்லா மிருகங்களையும் ஒரு மணி நேரத்தில் பார்த்து வர முடியுமா?

கமலா : முடியாது. மிருகக்காட்சிச் சாலையைச் சுற்றி வரவே சுமார் நான்கு மணி நேரம் வேண்டும்.

ஆசிரியர்: மிருகக் காட்சிச் சாலைக்குள் ஒரு பெரிய குளம் இருக்கிறது.

கமலா : ஆமாம். நான் அதைப் பார்த்திருக்கிறேன். அதில் சில படகுகளும் இருக்கின்றன. அவற்றில் ஏறி உல்லாச பவனி வரலாம்.

ராமு : நாம் மிருகங்களுக்கு ஏதாவது கொடுக்கலாமா?

கமலா : சிலர் பட்டாணியும் பழங்களும், பறவைகளுக்கும், சில மிருகங்களுக்கும் கொடுப்பதுண்டு.

ஆசிரியர்: ஆனால் அப்படிக் கொடுப்பது சரி அல்ல, ராமு.

கமலா : நாம் மிருகங்களை துன்புறுத்தவும் கூடாது.

ஆசிரியர்: ஆமாம். அவற்றினிடம் நாம் அன்பு காட்ட வேண்டும். அவையும் நம்மைப் போலத்தான்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Railway Station

There are two Railway stations in Madras.

What are they, Sir?

They are Egmore and Central stations.

These two are big stations.

Egmore is a Metre gauge terminus, Central is a broad gauge terminus.

What is Metre gauge, Sir?

The distance between two rails varies.
In the Meter gauge it is one metre. (3'–4"); broad gauge is 5½' and in narrow gauge is 2½'.

Where are narrow gauge lines, Sir?

The narrow gauge lines are in hilly areas like Ooty and Nilgiris.

Trains to and from the North are starting and arriving at Central Station.

For Southern bound trains Egmore is the main station.

We have to board train at Egmore for Kanyakumari.

For Delhi, Calcutta aud Bombay we have to go to the Central Station.

There are about 6460 stations in our Indian Railways.

Some trains are running by steam engines; Some are by electricity and some are by diesel.

Electric trains run between Beach and Tambaram and also in Bombay.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

புகைவண்டி நிலையம்

சென்னையில் இரண்டு ரெயில்வே ஸ்டேஷன்கள் உள்ளன.

என்ன என்ன சார்?

அவை, எழும்பூர், சென்டிரல் ரெயில் நிலையங்கள்.

இவை இரண்டும் பெரிய ரெயில் நிலையங்கள்.

எழும்பூர் மீட்டர் கேஜ் இறுதி ஸ்டேஷன்; சென்டிரல் பிராட் கேஜ் இறுதி (அகலப் பாதை) ஸ்டேஷன்.

மீட்டர் கேஜ் என்றால் என்ன?

இரண்டு தண்டவாளங்களுக்கு இடையே உள்ள தூரம் வேறு படும்.

மீட்டர் கேஜ் பாதையில் இரண்டு தண்டவாளங்களின் இடைவெளி 1 மீட்டர்; பிராட் கேஜ் தூரம் $5\frac{1}{2}$ அடி. நேரோ கேஜ் (குறுகிய பாதை) இடைவெளி $2\frac{1}{2}$ அடி.

நேரோ கேஜ் பாதைகள் எங்கே உள்ளன, ஸார்?

உதகமண்டலம், நீலகிரி போன்ற மலைப்பிரதேசங்களில் குறுகிய பாதை இருக்கிறது.

வடக்கே போகும் ரெயில்களுக்கும் அங்கிருந்து வரும் ரெயில் களுக்கும் சென்டிரல் நிலையமே இறுதியானது.

தெற்கே செல்லும் வண்டிகளுக்கு எழும்பூர் ஆரம்பம்.

கன்னியாகுமரி செல்ல எழும்பூரில் ரெயில் ஏறவேண்டும்.

கல்கத்தா, பம்பாய், டில்லி செல்ல சென்டிரல் போக வேண்டும்.

இந்திய ரெயில்வேக்களில் மொத்தம் 6460 ஸ்டேஷன்கள் உள்ளன.

சில ரெயில்கள் நீராவி இஞ்சினாலும், சில மின்சாரத்தாலும், சில டீசலினாலும் ஓடுகின்றன.

மின்சார ரெயில்கள் பீச்சுக்கும் தாம்பரத்துக்கு மிடையிலும், பம்பாயிலும் ஓடுகின்றன.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Who founded the steam engine, Sir ?

James Watt founded it.

There are passenger trains, express trains, and goods trains.

Express and mail trains will run fast.

Deccan Queen is the most fastest train in India.

The fares are also higher than the passenger trains.

We can reserve seats and berths for extra cost.

We can reserve tickets even before a week.

Goods trains are useful for transporting rice, wheat and other heavy machineries.

Railways give concession in the fare for students and excursion parties.

The passengers will come to the station sufficiently earlier before the departure of the trains.

As soon as the train arrives at the Platform the passengers will rush into the compartments to get seat.

Vendors will sell fruits, newspapers, biscuits and tea at the platform.

Railways help people to go round important places in India.

Railway is our National property.

We should not waste or repair fittings and furnitures while we travel.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நீராவி இஞ்சினை முதலில் யார் கண்டு பிடித்தார்கள்?

ஜேம்ஸ் வாட் கண்டுபிடித்தார்.

பிரயாணிகள் வண்டி, துரித வண்டி, சாமான்கள் ஏற்றும் வண்டி என்று மூன்று வகை ரெயில்கள் உள்ளன.

எக்ஸ்பிரஸ் வண்டிகளும் மெயில் வண்டிகளும் மிக வேகமாகச் செல்லும்.

டெக்கான் க்வூனே இந்தியாவில் மிக மிக வேகமாக ஓடும் ரெயில்.

பிரயாணிகள் வண்டியைவிட இவற்றுக்குக் கட்டணமும் அதிகம்.

தனியாகப் பணம் கட்டி இருக்கையும், படுக்கை வசதியும் முன்னதாகவே பதிவு செய்து கொள்ளலாம்.

ஒரு வாரத்துக்கு முன்பும் டிக்கெட் ரிசர்வ் செய்து கொள்ளலாம்.

பளுவான யந்திரங்களையும், அரிசி, கோதுமை மூட்டைகளையும் கூட்ஸ் ரெயில் ஏற்றிச் செல்லும்.

மாணவர்களுக்கும், சுற்றுலாச் செல்பவர்களுக்கும் ரெயில்வே நிர்வாகம் கட்டணச் சலுகை தருகிறது.

ரெயில் புறப்படுவதற்கு முன்பே பிரயாணிகள் ரெயில் நிலையத்துக்கு வந்து விடுவார்கள்.

ரெயில் பிளாட்பாரத்துக்குள் நுழைந்ததும் பிரயாணிகள் அடித்து மோதிக் கொண்டு இடம் பிடிப்பதற்காக வண்டிக்குள் நுழைவார்கள்.

பிளாட்பாரத்தில் சிறு வியாபாரிகள் பழம், பத்திரிகைகள் பிஸ்கோத்து முதலியன விற்பார்கள்.

மக்கள், இந்தியாவில் முக்கிய இடங்களைப் பார்க்க ரெயில்வே உதவுகிறது.

ரெயில்வே நமது தேசியச் சொத்து.

நாம் பிரயாணம் செய்யும்போது ரெயில்வே பொருள்களைச் சேதப்படுத்தக் கூடாது.

 Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Aerodrome

Have you ever gone to Meenambakkam, Balu?

Yes, Sir! I have seen many Aeroplanes too.

Meenambakkam is one of the big Aerodromes in India.

It is an international Air-port.

Even giant planes can land here.

Boing, Viper, Jumbo are some of the planes landing at Meenambakkam.

In Tambaram there is a military Airport.

Meenambakkam is the Civil Aerodrome.

There are some other small Airports in Tamil Nadu.

Some planes are very big and have more fecilities.

Only rich people can travell in the planes as fares are high.

Foreign planes also land and start from here.

Do you know who founded Aeroplane?

Rite Brothers have founded it, sir.

Have you ever travelled in the plane?

Twice I have flown from Madras to Calcutta.

The plane runs in the runway at the beginning.

Then suddenly it climbs into the air.

Some passengers will get vomiting sensation while the plane climbs into the air.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

விமான தளம்

பாலு, நீ மீனம்பாக்கம் போயிருக்கிறுயா?

போயிருக்கிறேன். பல விமானங்களைக் கூடப் பார்த்திருக்கிறேன்.

இந்தியாவிலுள்ள பெரிய விமான தளங்களில் மீனம்பாக்கமும் ஒன்று.

இது ஒரு சர்வதேச விமானதளம்.

மிகப் பெரிய விமானங்களும் இங்கே இறங்க முடியும்.

போயிங், வைப்பர், ஜம்போ முதலிய விமானங்களும் இங்கே வருகின்றன.

தாம்பரத்தில் இராணுவ விமான தளம் இருக்கிறது.

மீனம்பாக்கம் பயணிகள் போக்குவரத்து விமானதளம்.

தமிழ்நாட்டில் இன்னும் சில சிறிய விமானதளங்களும் உள்ளன.

சில விமானங்கள் மிகப் பெரியவை; வசதிகள் மிகுந்தவை.

விமானக் கட்டணங்கள் அதிகமானதால், பணக்காரர்களே பயணம் செய்ய முடியும்.

அந்நிய நாட்டு விமானங்களும் இங்கே வந்து இறங்கியும், கிளம்பியும் போகின்றன.

ஆகாயவிமானத்தைக் கண்டு பிடித்தது யார் தெரியுமா?

ரைட் சகோதரர்கள் கண்டுபிடித்தார்கள், ஸார்!

நீ விமானத்தில் பயணம் செய்திருக்கிறுயா?

இரண்டு தடவை சென்னையிலிருந்து கல்கத்தா சென்றிருக்கிறேன்.

விமானம் முதலில் 'தளச் சாலை' யில் மிக வேகமாக ஓடும்.

திடீரென்று தரையை விட்டு உயரக் கிளம்பும்.

விமானம் உயரக் கிளம்பும்போது சில பயணிகளுக்கு வயிற்றைப் புரட்டும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Airhostess will give sweets and snacks while flying.

Only ofter getting runway clearence from the tower, the plane begins to land.

A type of fighter plane called Gnat is manufactured by us.

The planes also carry urgent letters and goods to all places.

Aerodrome area is a protected place.

We couldn't take photos and go inside without permission.

The airport is always busy as the planes land and take off at short intervels.

Supersonic planes will fly faster than the sound.

As the sound of the Supersonic is very noisy many countries object to its over-flight.

Helicopter is a kind of plane which does not require runway.

It will land and take off straight away.

Temples

Tamil Nadu is famous for its temples.

We can see big and tall Gopurams only in South India.

There are many temples in Madras city.

The Karpagambal-Kapaleeswarar temple at Mylapore is very famous.

This temple was built by later Pallavas.

Ten days festival will be conducted yearly at the Kapaleeswarar temple in a grand manner.

Sri Vidyabharathi Book Centre, Sringeri.

CC-O. In Public Domain. Digitized by eGangotri

விமானப் பணிப்பெண் அப்போது இனிப்புகளை வழங்குவாள்.

'தளச் சாலையில் இறங்கலாம்' என்ற அறிவிப்புப் பெற்ற பிறகே விமானம் இறங்கத் தொடங்கும்.

'நாட்' என்ற சண்டை விமானத்தை நாமே தயாரித்திருக்கிறோம்.

முக்கிய கடிதங்களையும் சிறு பார்சல்களையும் விமானங்கள் ஏற்றிச் செல்லும்.

விமானதளம் பாதுகாக்கப்பட்ட இடம்.

விமானதளத்தைப் போட்டோ எடுக்கக்கூடாது; அநுமதியின்றி உள்ளேயும் போக முடியாது.

அடிக்கடி விமானங்கள் இறங்குவதும் புறப்படுவதுமாக இருப்பதனால் விமானதளம் எப்போதும் கூட்டமாக இருக்கும்.

ஸூபர் ஸானிக் என்ற புது விமானம் ஒலியைவிட வேகமாகப் பறக்கும்.

ஸூபர் ஸானிக் பறக்கும்போது எழுப்பும் ஒலி மிக மிக அதிகம்; அதனால் சில நாடுகள் அது தங்கள் நாட்டின் மேல் பறப்பதை எதிர்க்கின்றன.

ஹெலிகாப்டர் விமானத்துக்குத் 'தளச் சாலை' ஓட்டம் தேவை இல்லை.

அது நேராகவே ஏறவோ இறங்கவோ செய்யும்.

கோவில்கள்

கோயில்களுக்குப் புகழ் பெற்றது தமிழ் நாடு.

பெரிய, உயர்ந்த கோபுரங்களை உடைய கோவில்களைத் தென்னிந்தியாவில்தான் பார்க்கமுடியும்.

சென்னை நகரத்தில் பல கோவில்கள் உள்ளன.

மயிலாப்பூரிலுள்ள ஸ்ரீ கற்பகாம்பாள் — கபாலீசுவரர் கோவில் மிகவும் புகழ் பெற்றது.

பிற்காலத்துப் பல்லவர்கள் இதைக் கட்டினார்கள்.

ஆண்டுதோறும் பத்து நாள் உற்சவம் மிக விமரிசையாகக் கபாலீசுவரர் கோவிலில் நடக்கும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

The Arupathimoovar and the car festivel are important.

Many thousands come and see the Car and the Arupathi moovar.

Arupathimoovar means the sixty three Tamil Saints.

Free food and buttermilk is provided to the people by charitable institutions.

Sri Parthasarathy temple is in Triplicane.

On Vaikunta Ekadasi day there will be a heavy rush in this temple.

It has a big outer Gopuram with beautiful sculptures.

Vadapalani is famous for Murugan temple.

This temple was built recently and kept clean.

Every temple has a tank attached to it.

The floating festival will be held every year in these tanks.

These temples are giving a sort of solace and peace to us.

Having dharshan of a gopuram itself is good' says a Tamil proverb.

It is a good habit if we go daily and worship the Lord.

Sri Karpagambal is famous for alleviating the sufferings of the devoties.

The temples portray our culture.

We can hear religious discourses in temples.

Children must cultivate good habits and faith in God.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தேரும் அறுபத்து மூவரும் மிகவும் முக்கிய உற்சவ நாட்கள்.

ஆயிரக்கணக்கான மக்கள் இவற்றைப் பார்க்க வருவார்கள்.

அறுவத்து மூவர் என்றால், அறுபத்து மூன்று நாயன் மார்களைக் குறிக்கிறது.

தர்ம ஸ்தாபனங்கள், மக்களுக்கு இலவசமாக உணவும் மோரும் அளிக்கும்.

திருவல்லிக்கேணியில் ஸ்ரீபார்த்தசாரதி கோவில் இருக் கிறது.

வைகுண்ட ஏகாதசி அன்று இந்தக் கோவிலில் நிறையக் கூட்டம் வரும்.

சிறந்த சிற்ப எழிலுடன் இதன் வெளிக் கோபுரம் விளங்கு கிறது.

வடபழனியில் முருகன் கோவில் விசேஷமானது.

இந்தக் கோவில் சமீபத்தில் கட்டியது; அழகாகவும் விளங்குகிறது.

ஒவ்வொரு கோவிலைச் சார்ந்தும் திருக்குளம் இருக்கிறது.

தெப்பவிழா ஆண்டுதோறும் இந்தக் குளங்களில் நடக்கும்.

இந்தக் கோவில்கள் நமக்கு ஒருவித அமைதியையும் திருப்தியையும் அளிக்கின்றன.

'கோபுர தரிசனமே கோடி புண்ணியம்' என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு.

தினமும் கோவிலுக்குச் சென்று இறைவனை வணங்குவது நல்ல பழக்கம்.

ஸ்ரீகற்பகாம்பாளைத் தரிசனம் செய்தால் பக்தர்களின் மனக் கவலை தீரும்.

கோவில்கள் நமது பண்பாட்டைப் பிரதிபலிக்கின்றன.

கோவில்களில் சமயச் சொற்பொழிவுகளைக் கேட்கலாம்.

குழந்தைகள் நல்ல பழக்கங்களையும் கடவுள் பக்தியையும் அவசியம் கற்றுக்கொள்ள வேண்டும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

University

There are so many colleges in Madras.

University is the controlling body of all the colleges.

It will formulate Rules and Regulations and Curriculam.

Madras University is more than hundred years old.

You can see the University buildings in the beach road.

It conducts degree examinations.

How many Universities are there in Tamil Nadu.

There are three Universities in Tamil Nadu.

They are Madras University, Annamalai University and Madurai University.

For each University, there are affiliated Colleges.

Engineering Colleges, Music Colleges and Medical Colleges are also attached to Universities.

There is a Agricultural University in Coimbatore.

Matriculation examination is conducted by the University.

Each year, University issues degrees to the students at its Convocation.

Vice-Chancellor is the head of the University.

The Governor is the Chancellor of the University.

Colleges run evening classes for those employed to pursue their studies.

Madras University has produced many eminent men in the field of Literature and Medicine.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பல்கலைக் கழகம்

சென்னையில் நிறையக் கல்லூரிகள் இருக்கின்றன.

பல்கலைக் கழகம் கல்லூரிகளைக் கண்காணிக்கிறது.

பாட முறையையும் விதிமுறைகளையும் பல்கலைக் கழகம் உருவாக்குகிறது.

சென்னைப் பல்கலைக் கழகம் நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்டது.

கடற்கரைச் சாலையில் பல்கலைக் கழகக் கட்டடங்கள் இருக்கின்றன.

அது மேற்படிப்பு (டிகிரி) பரீட்சைகளை நடத்துகிறது.

தமிழ் நாட்டில் எத்தனை பல்கலைக் கழகங்கள் உள்ளன?

தமிழ் நாட்டில் மூன்று பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன.

அவை சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக் கழகம்.

ஒவ்வொரு பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்திலும் பல கல்லூரிகள் இணைந்துள்ளன.

பொறியியல் கல்லூரி, சங்கீதக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி ஆகியவையும் பல்கலைக் கழகங்களில் இணைந்துள்ளன.

கோயம்புத்தூரில் விவசாயப் பல்கலைக் கழகம் ஒன்று இருக்கிறது.

மெட்ரிகுலேஷன் பரீட்சையைப் பல்கலைக் கழகமே நடத்துகிறது.

பட்டமளிப்பு விழாவின்போது, பல்கலைக் கழகம் பல மாணவர்களுக்குப் பட்டங்கள் வழங்குகிறது.

துணைவேந்தர் பல்கலைக் கழகத்தின் தலைவர்.

மாநிலக் கவர்னர் பல்கலைக் கழகத்தின் வேந்தர்.

வேலை பார்ப்பவர்கள், தங்கள் படிப்பைத் தொடரக் கல்லூரிகளில் இரவு வகுப்பை நடத்துகிறார்கள்.

இலக்கியத் துறையிலும் விஞ்ஞானத்துறையிலும் தலைசிறந்த பல மேதைகளைச் சென்னைப் பல்கலைக்கழகம் உருவாக்கி அளித்திருக்கிறது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

There are many departmental heads in an University.

University is an autonomus body in framing the curriculam for studies at all levels.

The students and the Professors usually wear special gowns on the Convocation day.

Now-a-days College degree is a 'must' for good employment.

Library

Where are you going Ramu?

I am going to the library Balu.

Why are you going there?

My father is a Member in Connemara Library. He asked me to return the book.

There are many libraries in the Madras city.

Central library is the biggest and having its own buildings.

It is in Mount Road.

There are spacious rooms, halls and furniture for comfortable reading.

The Connemara and the University libraries are the biggest.

We can get all kinds of new and old books.

All the periodicals will be available there.

You can sit and read.

Books related to politics, Economics, Art, Science and Novels will be available.

You can read and take notes from the books.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பல்கலைக் கழகங்களில் பல துறைகள் உள்ளன.

பாட போதனையையும் பாட திட்டத்தையும் வகுக்கும் சுய அதிகாரம் பெற்றது பல்கலைக் கழகம்.

பட்டமளிப்பு விழாவின்போது மாணவர்களும் பேராசிரியர்களும் தனி வகை உடுப்பை அணிவார்கள்.

நல்ல வேலைகள் கிடைக்கக் கல்லூரிப் பட்டம் இந்த நாளில் தேவைப்படுகிறது.

நூலகம்

ராமு, நீ எங்கே போகிறாய்?

நான் நூலகத்துக்குப் போகிறேன், பாலு!

எதற்காக அங்கே போகிறாய்?

கன்னிமெரா நூல் நிலையத்துக்குப் போகிறேன். என் தகப்பனார் அதில் ஓர் அங்கத்தினர். அவர் எடுத்து வந்த புத்தகத்தைத் திருப்பிக் கொடுக்கவேண்டும்.

சென்னையில் பல நூல் நிலையங்கள் உள்ளன.

அரசின் மத்திய நூலகம் பெரியது; சொந்தக் கட்டிடம் அதற்கு இருக்கிறது.

அது மௌன்ட் ரோடில் உள்ளது.

வாசிப்பதற்கு உதவியாக நாற்காலிகளும் மேஜைகளும் பெரிய வராந்தாக்களும் அங்கே உள்ளன.

கன்னிமெரா நூல் நிலையமும் பல்கலைக்கழக நூலகமும் மிகப் பெரியவை.

இங்கே எல்லாவிதப் புத்தகங்களும் கிடைக்கும்.

பலவகைப் பத்திரிகைகளும்கூட இங்கே வருகின்றன.

இங்கே உட்கார்ந்து எல்லாவற்றையும் படிக்கலாம்.

அரசியல், பொருளாதாரம், கலை, விஞ்ஞானம், நாவல்கள் ஆகியவை சம்பந்தப்பட்ட நூல்களும் இங்குக் கிடைக்கும்.

புத்தகங்களைப் படித்துத் தேவையான குறிப்புக்களை எடுத்துக் கொள்ளலாம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

It you become a member, you can take home the books.

We have to pay subscription to become a Member.

Books will be given at your doors also by the Mobile Van.

Foreign Embassies also are running libraries in the city.

We can get foreign books and periodicals there.

Students should cultivate the habit of reading extra literatures to improve their knowledge.

We could not afford to buy all the books and Magazines.

Therefore Library is providing all we want.

Are you taking books from your school library, Ramu ?

Yes, Sir. We are having a period every week for Library study.

You are all going to become the leaders of tomorrow.

You must know the life and teachings of Mahatma Gandhi, Nehru and Tagore.

Their life and teachings will inspire you and make you a true citizen.

Art

Seetha : Where are you going, Kamala ?

Kamala : I am going to attend a music performance ?

Seetha : Shall I accompany you ? Is it a light music ?

Kamala : No. No. It is a classical Carnatic music.

Seetha : I can relish only light programms, Kamala.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நூலகத்தில் அங்கத்தினரானால் புத்தகங்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று படிக்கலாம்.

அங்கத்தினராகச் சந்தா கட்டவேண்டும்.

'நடமாடும் நூலகம்' என்ற வண்டி உங்கள் வீட்டிலேயே நூல்களைக் கொண்டு வந்து கொடுக்கும்.

அந்நிய நாட்டுத் தூதரகங்கள் சிலவும் வாசகசாலை நடத்து கின்றன.

அந்நிய நாட்டுப் புத்தகங்களையும் பத்திரிகைகளையும் இங்கே பெறலாம்.

பாட புத்தகங்களைத் தவிர பிற நூல்களையும் மாணவர்கள் படிக்கவேண்டும். அப்போதுதான் அறிவு விசாலமாகும்.

நமக்குத் தேவையான எல்லாப் புத்தகங்களையும் பத்திரிகை களையும் நம்மால் வாங்க முடியாது.

அதனால் நூலகம் நமக்கு உதவுகிறது.

உன் பள்ளி நூல் நிலையத்திலிருந்து புத்தகம் எடுத்துப் படிப்பதுண்டா, ராமு?

உண்டு. வாரத்துக்கு ஒரு வகுப்பு, நூல்களைப் படிக்கவே இருக்கிறது.

நீங்கள் எல்லாம் வருங்காலத் தலைவர்கள்.

நேரு, காந்தி, தாகுர் போன்றவர்கள் எழுதிய நூல்களை நீங்கள் படிக்கவேண்டும்.

அவர்களுடைய நூல்களைப் படித்தால், வாழ்க்கையில் முன்னேறி, சிறந்த குடிமகனாக வாழலாம்.

கலைகள்

சீதா : கமலா, நீ எங்கே போகிறாய்?

கமலா : ஒரு சங்கீத நிகழ்ச்சியைக் கேட்க நான் போகிறேன்.

சீதா : நானும் உன்னுடன் வரட்டுமா? அது மெல்லிசை நிகழ்ச்சியா?

கமலா : இல்லை. இது சாஸ்திரீய கர்நாடக சங்கீதம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

சீதா : என்னால் மெல்லிசையையே ரசிக்கமுடிகிறது, கமலா.

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Kamala : You should develop the taste for superior art.

Seetha : Are you learning Carnatic Music ?

Kamala : Yes. I am learning for the past two years in the music College.

Seetha : Music college ? Where is it ?

Kamala : It is in Adyar. Many prominent musicians also teach music privately.

Seetha : I could not enjoy Carnatic music though I attended some.

Kamala : Music is a divine art. The music trinity, Thyagaraja, Muthuswami Dikshidar and Shyama Sastri have sung thousands of devotional Kritis.

Seetha : Where had you been yesterday evening ?

Kamala : I had been to a dance recital yesterday evening.

Seetha : What are the famous dances in India, Kamala ?

Kamala : Bharath Natyam is famous in Tamil Nadu. Others are Manipuri, Kathakali, Kuchipudi and Kathak.

There are many expert exponents of Bharath Natya in Madras.

This art was originally patronised by Kings and rich peoples.

Seetha : Who has founded it ?

Kamala : Saint Bharata has formulated this dance form at first.

The person who teaches Bharata Natyam is called Nattuvanar.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கமலா : உயர்ந்த கலைகளைப் புரிந்து அநுபவிக்கப் பழகணும்.

சீதா : நீ கர்நாடக இசையைக் கற்றுக் கொள்கிறாயா?

கமலா : சங்கீதக் கல்லூரியில் இரண்டு ஆண்டுகளாகக் கற்றுக்கொண்டு வருகிறேன்.

சீதா : சங்கீதக் கல்லூரியிலா? அது எங்கே இருக்கிறது?

கமலா : அது அடையாறில் இருக்கிறது. சங்கீத வித்வான்கள் சிலர் தனிப்பட்ட முறையிலும் கற்றுக் கொடுக்கிறார்கள்.

சீதா : கர்நாடக சங்கீத நிகழ்ச்சிகள் சிலவற்றுக்குப் போயிருக்கிறேன். ஆனால் அவற்றை என்னால் ரசிக்க முடியவில்லை.

கமலா : சங்கீதம் தெய்விகக் கலை. சங்கீத மும்மூர்த்திகளான தியாகராஜர், முத்துசாமி தீட்சதர், சியாமா சாஸ்திரிகள் ஆகிய பெரியோர்கள் ஆயிரக்கணக்கான கிருதிகளைப் பாடியிருக்கிறார்கள்.

சீதா : நேற்று மாலை நீ எங்கே போயிருந்தாய்?

கமலா : நடன நிகழ்ச்சியைக் காணச் சென்றிருந்தேன்.

சீதா : இந்தியாவில் பிரபலமான நடனங்கள் என்ன என்ன, கமலா?

கமலா : தமிழ் நாட்டில் பரத நாட்டியம் பிரபலமானது. மற்றவை, மணிப்புரி, கதகளி, குச்சிப்புடி, கதக் முதலியவை.

பரதக்கலையைப் பல நடன நிபுணர்கள் பயிற்சி அளிக்கிறார்கள்.

இந்தக் கலையை ஆதியில் வளர்த்தவர்கள் அரசர்களும் பிரபுக்களுமே.

சீதா : இதை யார் கண்டுபிடித்தார்கள்?

கமலா : இந்த நடன முறையை முனிவர் பரதர் வகுத்து அளித்தார். பரதக் கலையைப் போதிப்பவர்களை நட்டுவனார் என்று அழைப்பார்கள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Seetha : Is there any dance college in the city ?

Kamala : No. There are many Dance Schools run by Nattuvanars.

Seetha : Are you learning Bharata Natyam also ?

Kamala : No. But I like it very much. The dresses and ornaments will be colourful and attractive.

Danseuse will worship Lord Nataraja before performance.

Seetha : Why do they worship first ?

Kamala : Lord Nataraja is the supreme God for this art. He himself a dancer.

There are many literatures pertaining to this dance.

Seetha : Are they in English?

Kemala : Mostly are in Sanskrit. Some has been translated into English.

Seetha : Did you use to go to Drama performances?

Kamala : I used to go with my parents. My father is a member in a Sabha.

Seetha : Ther are many Sabhas in the city which arrange music, dance and drama programmes.

Kamala : They afford recreation to the city people.

Seetha : The Sabhas, thus, patronise the art also.

Kamala : If you have taste in fine arts it will give you pleasure.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சீதா : சென்னை நகரத்தில் நடனக் கல்லூரி என்று இருக்கிறதா?

கமலா : இல்லை. பல நட்டுவனார்கள் சொந்தத்தில் நடனப் பள்ளிகளை நடத்துகிறார்கள்.

சீதா : நீ பரத நாட்டியமும் கற்றுக் கொள்கிறாயா?

கமலா : இல்லை. ஆனால் அது எனக்கு ரொம்பப் பிடிக்கும். நடன உடைகளும் நகைகளும் மிகவும் கவர்ச்சியாகப் பல வண்ணங்களில் இருக்கும்.

நாட்டியப் பெண்கள் முதலில் நடராஜரை வணங்கி விட்டே நிகழ்ச்சியை ஆரம்பிப்பார்கள்.

சீதா : ஏன் அப்படிச் செய்கிறார்கள்?

கமலா : நடராஜர்தாம் இந்தக் கலையின் மூலக் கட ள். அவரே ஒரு நடனசுந்தரர்.

நடனக் கலையைப் பற்றி நிறைய நூல்கள் இருக்கின்றன.

சீதா : அவை ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கின்றனவா?

கமலா : இல்லை. அவை சம்ஸ்கிருதத்திலே இருக்கின்றன. சில ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

சீதா : நீ அடிக்கடி நாடகம் பார்க்கச் செல்வதுண்டா?

கமலா : என் பெற்றோர்களுடன் போவேன். என் தகப்பனார் ஒரு சபாவில் உறுப்பினர்.

சீதா : நகரத்தில் பல சபாக்கள் உள்ளன. அவை சங்கீதம், நடனம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகளை அளிக்கின்றன.

கமலா : நகர மக்களுக்குப் பொழுது போக்காகவும் அது அமைகிறது.

சீதா : இந்த முறையில் கலைகளை அவை ஆதரிக்கவும் செய்கின்றன.

கமலா : நுண்கலைகளைக் கற்றுக் கொண்டால் மனத்துக்கு அவை மகிழ்ச்சியை அளிக்கும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Talking Toys

Do you know anything about talking toys?

Is it true? Really it is surprising, Sir.

A firm is making talking toys in Madras.

The factory is near Thiruvanmiyur.

If you press the bottom of the toy it will speak like a parrot.

How is it possible, sir?

In Japan they are making wonderful toys.

A businessman went there and learnt the toy making.

First they are making toys as usual with Rubber.

Before closing the bottom, they fix a recorded tape in the toys' belly.

Small words like, Mumma, Sir, Darling etc., are recorded in the tape.

The recorded tape works in pen torch cells.

Foreigners like these toys and buy them.

They say, these toys are like companions in their leisure.

The prices of the toys are slightly higher.

Many varieties of toys are also available.

Some big toys will also sing the english rhymes.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பேசும் பொம்மைகள்

பேசும் பொம்மையைப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?

உண்மையாகவா? ஆச்சரியமாயிருக்கிறதே!

சென்னையில் ஒரு நிறுவனம் பேசும் பொம்மைகளைத் தயாரிக்கிறது.

திருவான்மியூர் அருகில் அந்தத் தொழிற்சாலை இருக்கிறது.

பொம்மையின் வயிற்றுப் பாகத்தை அழுத்தினால் பச்சைக் கிளியைப் போல் அது பேசும்.

எப்படி ஸார் அது முடிகிறது?

ஜப்பானில் அதிசயமான பல பொம்மைகளைச் செய்கிறார்கள்.

ஒரு தொழிலதிபர் அங்கே சென்று, பொம்மை செய்யும் கலையைக் கற்று வந்தார்.

முதலில் ரப்பரினால் பொம்மையை வழக்கம்போல் செய்து கொள்வார்கள்.

பொம்மையின் வயிற்றுப் பாகத்தை மூடுவதற்குமுன், பதிவு செய்த நாடா ஒன்றை வயிற்றுக்குள் வைப்பார்கள்.

'அம்மா, கண்ணே, அப்பா' போன்ற சிறு வார்த்தைகள் அந்த நாடாவில் பதிவு செய்யப்பட்டிருக்கும்.

ஒலிப்பதிவு செய்த நாடா சிறு பாட்டரிகளில் இயங்குகிறது.

அந்நிய நாட்டினர் இவற்றைப் பெரிதும் விரும்புகின்றனர்.

இந்தப் பொம்மைகள் தோழனைப் போல் விளங்குவதாக அவர்கள் கூறுகின்றனர்.

இந்தப் பேசும் பொம்மைகளின் விலை சற்று அதிகம்.

பலவிதமான பொம்மைகள் அங்கே கிடைக்கின்றன.

சில பெரிய பொம்மைகள், ஆங்கில மோனைப் பாடல்களைக் கூடப் பாடும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Snake Park

There are many parks in Madras City.

People use to go in the evenings with their children.

Have yon ever seen Snake Park, Ramu?

No, Sir! where is it?

The snake park is in Guindy, behind Raj Bhavan.

This park will be more interesting than the ordinary Parks.

Can we see snakes, Sir?

Yes, There are hundreds of snakes and so many varieties.

Some rare species are also kept there.

You can see Whipers, Kraits, Cobras, Pythons, Water snakes and Rattle snakes, etc.

Some are poisonous and some are not.

Cobra is the most poisonous snake.

They are extracting venom from snakes.

Venom is used for preparing some medicines.

There are some experts to handle vencmous snakes.

Snake venom is more costly.

A cobra will yield ten to twelve drops of poison at a time.

They change the liquid venom into powder for preservation.

Hindus worship snake idols.

You can see many idols under a peepul tree in villages.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பாம்புப் பண்ணை

சென்னை நகரத்தில் பல பூங்காக்கள் இருக்கின்றன.

மக்கள் மாலை வேளையில், தங்கள் குழந்தைகளுடன் பூங்காவுக்குச் செல்வார்கள்.

ராமு, நீ பாம்புப் பண்ணையை எப்போதாவது பார்த்திருக்கிறாயா?

இல்லை, ஸார்! அது எங்கே இருக்கிறது?

ராஜபவனத்துக்குப் பின்னால், கிண்டியில் இருக்கிறது.

சாதாரணப் பூங்காக்களைவிட இது மிகவும் சுவையானது.

இங்கே பாம்புகளைப் பார்க்க முடியுமா, ஸார்?

ஆமாம். நூற்றுக் கணக்கான பலவிதப் பாம்புகளை இங்கே காணலாம்.

சில அரிய வகைப் பாம்புகளையும் இங்கே வைத்துக் காப்பாற்றுகிறார்கள்.

அங்கே கட்டுவிரியன், சர்ப்பம், மலைப்பாம்பு, தண்ணீர் பாம்பு, சாரைப் பாம்பு முதலியவற்றைப் பார்க்கலாம்.

சில விஷமுள்ளவை; சில விஷம் இல்லாதவை.

சர்ப்பம் மிகவும் கொடிய விஷமுள்ள பாம்பு.

அங்கே பாம்புகளிலிருந்து விஷம் எடுக்கிறார்கள்.

பாம்பு விஷம் சில மருந்துகள் செய்ய உபயோகப்படுகிறது.

விஷமுள்ள பாம்புகளைப் பிடித்துச் சமாளிக்கத் திறமைசாலிகள் இங்கே உள்ளனர்.

பாம்பு விஷம் மிகவும் விலை உயர்ந்தது.

ஒரு சர்ப்பம் ஒரு சமயத்தில் பத்து, பன்னிரண்டு துளி விஷத்தைக் கக்கும்.

அதிக நாள் வைத்திருப்பதற்காக, திரவமாக உள்ள விஷத்தைப் பொடியாக மாற்றி வைத்திருக்கிறார்கள்.

இந்துக்கள் பாம்புச் சிலைகளை வணங்குவார்கள்.

கிராமப் புறங்களில் அரசமரத்தடியில் பல பாம்புச் சிலைகளைக் காணலாம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Circus

Where does the short flashes of light come from, father ?

Circus people flash light from a tower.

Why are they doing like that ?

That is one way to attract people. Many people will notice this light and come to know about the circus.

Shall we go father to-day ?

It is too late to go to-day. We shall go tomorrow.

Ramu and his father went next day.

They purchased tickets and went in.

After the bell rang, four persons came and stood in a platform.

Their dress, behaviour and speech are funny.

They are called clowns.

Their duty is to make you laugh.

The tall man and the short man are doing mimicry and make us laugh.

The elephants, horses, monkeys, lions, tigers and rhinoceros are obeying the masters orders.

The Ring master trains the animals.

There is a huge cage in a corner.

A man is opening the cage slowly.

Ferocious tigers come out roaring into the arena.

The Ring master brings a goat there.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சர்க்கஸ்

பளிச்சிடும் இந்த ஒளி எங்கிருந்து வருகிறது, அப்பா?

சர்க்கஸ்காரர்கள் உயர்ந்த மண்டபத்திலிருந்து இந்த ஒளியைப் பாய்ச்சுகிறார்கள்.

ஏன் அப்படிச் செய்கிறார்கள்?

மக்களைக் கவர இது ஒரு வழி. பல மக்கள் இந்த ஒளியைக் கண்டு சர்க்கஸைப் பற்றித் தெரிந்து கொள்வார்கள்

சர்க்கஸைப் பார்க்க வரும்படி இப்படி மக்களைத் தூண்டுகிறார்கள்.

இன்று நாம் போகலாமா, அப்பா?

இன்று நேரமாகி விட்டது; நாளைக்குப் போகலாம்.

ராமுவும் அவன் தகப்பனும் மறுநாள் சென்றார்கள்.

டிக்கெட் வாங்கிக்கொண்டு உள்ளே போனார்கள்.

மணி அடித்ததும், ஒரு மேடையின்மேல் நான்கு பேர் வந்து நின்றார்கள்.

அவர்கள் உடையும், பேச்சும், நடத்தையும் வேடிக்கையாக இருந்தன.

அவர்கள் சர்க்கஸ் கோமாளிகள்.

நம்மைச் சிரிக்க வைப்பதே அவர்கள் வேலை.

உயரமான மனிதனும் குள்ளனும் கோமாளித்தனம் செய்து நம்மைச் சிரிக்க வைக்கிறார்கள்.

யானைகள், குதிரைகள், குரங்குகள், சிங்கங்கள், புலிகள், காண்டாமிருகம் எல்லாம் மாஸ்டருக்கு அடங்கி நடக்கின்றன.

ரிங் மாஸ்டர் மிருகங்களைப் பழக்குகிறார்.

ஒரு பக்கத்தில் ஒரு பெரிய கூண்டு இருக்கிறது.

ஒரு மனிதன் அந்தக் கூண்டைத் திறக்கிறான்.

பயங்கரமாக உறுமிக் கொண்டு புலிகள் சர்க்கஸ் மேடைக்கு வருகின்றன.

ரிங் மாஸ்டர் ஓர் ஆட்டை அங்கே கொண்டு வருகிறார்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Tigers usually kill the goats and eat them.

But the circus tigers are afraid to the ring master.

Then the tigers sit on stools and stare at the goat placed between them.

Ramu enjoyed the dance of the elephants.

A monkey rides the cycle with his wife at the back.

The ladies walk on the rope balancing small cups on their heads.

They not only walk but they dance in the middle of the rope.

That scene was thrilling to see.

Months together they get trained for this.

How many months they will stay here father ?

Usually circus people camp in a town as long as the collections are good.

Yes. They have to spend thousand of rupees daily.

In India, Gemini Circus is famous.

There are nearly two hundred members including ladies and more than fifty animals.

Rhinoceros is vegetarian.

The food for it alone will cost more than hundred rupees daily!

May be! How a huge animal it is!

Is it not dangerous to train animals, father ?

Really. The ring master's life is in danger daily till the show is over.

Circus will provide you pleasure, thrill and emotion.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

புலிகள் சாதாரணமாக ஆட்டைக் கொன்று தின்றுவிடும்.

ஆனால் சர்க்கஸ் புலிகள் ரிங் மாஸ்டருக்குப் பயந்து நிற்கின்றன.

பிறகு புலிகள் ஒரு ஸ்டூலில் உட்கார்கின்றன; அவற்றுக்கு மத்தியில் நிற்கும் ஆட்டை விழித்துப் பார்க்கின்றன.

யானைகள் நடனமாடியதை ராமு மிகவும் ரசித்தான்.

தன் மனைவியைப் பின்னால் வைத்துக்கொண்டு ஒரு குரங்கு சைக்கிள் விட்டது.

தலையில் கிண்ணங்களை வைத்துக் கொண்டு சில பெண்கள் கயிற்றில் நடந்தார்கள்.

கயிற்றில் நடந்தது மட்டுமல்ல; நடனமும் ஆடினார்கள்.

அந்தக் காட்சி பார்ப்பதற்கு மிகவும் திகைப்பாக இருந்தது.

அநேக மாதங்கள் இந்த வித்தைக்காக அவர்கள் பயிற்சி பெற்றார்கள்.

இன்னும் எத்தனை மாதங்கள் அவர்கள் இங்கே தங்குவார்கள்?

பணம் வசூல் ஆகிறவரையில் சர்க்கஸ்காரர்கள் ஓர் ஊரில் தங்குவார்கள்.

அவர்கள் தினந்தோறும் ஆயிரக்கணக்கில் செலவழிக்க வேண்டியிருக்கின்றது.

இந்தியாவில் ஜெமினி சர்க்கஸ் மிகவும் பிரபலமானது.

பெண்கள் உள்பட இருநூறு மனிதர்களும் ஐம்பதுக்கும் மேற்பட்ட பிராணிகளும் அங்கே உள்ளன.

காண்டாமிருகம் சைவ உணவே சாப்பிடும்.

அதற்கு மட்டுமே ஒரு நாளைக்கு நூறு ரூபாய்க்குமேல் ஆகும்!

எத்தனை பெரிய மிருகம்!

மிருகங்களைப் பழக்குவது ஆபத்தான வேலை இல்லையா?

ஆமாம். நிதம் காட்சி முடிகிற வரைக்கும் ரிங் மாஸ்டரின் உயிருக்கு ஆபத்துதான்.

சர்க்கஸ் உங்களுக்கு மகிழ்ச்சி, திகில், உணர்ச்சிப் பெருக்கு ஆகியவற்றைத் தருகின்றது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Bazaar

Kamala, where are you going ?

I am going to China Bazaar with my mother.

Why do you go there ?

My mother wants to purchase some silk sarees, Banu.

Do you know the new name of China Bazaar ?

Yes. It is now called as Nethaji Subhas Chandra Bose Road.

Correct. There are other famous bazaars also in Madras.

Mount Road also is more or less a bazaar.

The other one is Pondy bazaar at T. Nagar.

In China Bazaar we can buy everything.

The street hawkers will sell all kinds of plastic and leather goods.

There are big shops selling jewels made of gold and silver.

You can see show rooms of Mill cloth.

Those show rooms are furnished in a luxurious manner.

There will be a heavy crowd in the bazaar in the evenings?

Mostly ladies will go in the evening for shopping.

There are flower shops separately.

That place is called Flower Bazaar.

Flower Bazaar is also a part of China Bazaar.

You can get garlands and flowers at any time there.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடைத் தெரு

கமலா, நீ எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?

நான் என் தாயாருடன் சைனாபஜார் போகிறேன்.

எதற்காக அங்கே போகிறாய்?

என்னுடைய தாயார் சில பட்டுப் புடைவைகள் அங்கே வாங்கப் போகிறாள்.

சைனா பஜாரின் புதிய பெயர் என்ன தெரியுமா உனக்கு?

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை என்பது புதுப் பெயர்.

சரிதான். சென்னையில் இன்னும் சில பிரபல கடைத்தெருக்கள் உள்ளன.

மௌன்ட் ரோடுகூட ஏறக்குறையக் கடைத்தெரு தான்.

தியாகராய நகரில் பாண்டி பஜார் உள்ளது.

சைனா பஜாரில் நாம் எதுவும் வாங்கலாம்.

நடை பாதை விற்பனையாளர்கள் பிளாஸ்டிக் சாமான்களும் தோல் பொருள்களும் விற்பார்கள்.

தங்க, வெள்ளி ஆபரணங்கள் விற்கும் பெரிய கடைகளும் அங்கே உள்ளன.

மில்களின் துணி விற்பனை நிலையங்களை அங்கே காணலாம்.

இவர்கள் தங்கள் விற்பனை நிலையங்களை மிகவும் கவர்ச்சியாக ஆடம்பரமாக அலங்கரித்திருப்பார்கள்.

மாலை வேளைகளில் கடைத் தெருக்களில் கூட்டம் அதிகமாக இருக்கும்.

அதிகமாகப் பெண்களே மாலையில் சாமான்கள் வாங்கப் போவார்கள்.

பூக்கடைகள் அங்கே தனியாக உள்ளன.

அந்த இடத்துக்குப் பூக்கடைத் தெரு என்று பெயர்.

